# என் உயிரில் நீ பாதி



அம்.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உயிரில் நீ பாதி

அ. கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் உயிரில் நீ பாதி** - கவிதை இலக்கியம்

**ஆசிரியர் :** அ. கௌரிதாசன்

**மொழி :** தமிழ்

**பதிப்புரிமை :** மோகனேஸ்வரி கௌரிதாசன்©

**முதற் பதிப்பு :** 2021.05.15

**அச்சுப் பதிப்பு :** தேடல் அமைப்பு

**பக்கங்கள் :** 114

**பிரதிகள் :** 500

**அட்டை அமைப்பு :** வை.கே. ராஜு

**பக்க வடிவமைப்பு :** எம்.ஏ.எம். அஸ்மி (075 7022680)

**தொடர்புறும் தொலைபேசி எண் :** 026 2236939, 077 6249786, 075 2025786

**விலை :** 450/-

**ISBN :** 978-624-98489-1-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படையல்

'பற்பல விருது - சான்று
பட்டங்கள் பாராட்டுக்கள்
பெற்றிடத் துணையாய் நின்று
பீடுடை சேவை தந்து,
இற்றரை தனையே நீத்த
**'இரா குல மணி'**க்கு இந்த -
நற்றமிழ்க் கவிதை (மா)நூலை
நானுமே படையல் செய்தேன்!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசி உரை !

காத்துக் கிடந்தீரே,
    'கவி' வேண்டு மென்று சொல்லி,
பார்த்தீரா வந்துளதோர்
    பாக் கூட்டு - இனியென்ன!

பாயை விரியுங்கள்,
    பசி என்று வயிறு தரும்
நோயும் விலகி விடும்,
    நொடியும் வீண் ஆக்காமல்....

திறவுங்கள் படியுங்கள்,
    செந்தமிழை வரிவரியாய்!
மறவுங்கள் மற்ற தெலாம்,
    மறவேல்தா மரைதாசன்!

'என் உயிரில் நீ பாதி'
    என்றால் விடலாமா?
நன்முறையிலே நெஞ்சில்
    நாவால் இருத்துங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன வடிவத்தில்
எவ்விதம் 'பா' வேண்டியதோ
சின்ன னோ பெரிதாமோ
செறிந்துளது இந்நூலில்!

அறுபத்து நான்கினையும்
ஆற விடாமலுக்கு
விறு விறென்று படியுங்கள்,
விட்டு விடா தீரெதையும்!

தாமரை தாசனெனில்
தமிழ்ப் பாவுக் கென்னகுறை?
ஆமவனை நாடி அமு -
தள்ளி விழுங்குங்கள்!

'பேசி' யினைச் சற்றொதுக்கிப்
பெருநூலைப் படியுங்கள்!
ஆசி உரைப் பா தந்தேன்,
ஆம், வாழ்க 'கவிமணி' யார்!

கவிஞரேறு - தாமரைத்தீவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் கோலங்கள் பேசும் கவிகள்

மிக எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் மரபுக் கவிதைகள் எழுதுவது ஒரு தனிப்பட்ட கலை. பாடுபொருளை வாசகர் உள்ளங்களில் பதியவிடல் என்பது இதன் அடிப்படைகளில் ஒன்று. தேவைகள், பிரச்சினைகள், வாழ்வியல் விழுமியங்கள் இதன் மூலமாக வெளிக்கொணரப்படும்போது அது பலராலும் பேசப்படக்கூடியதாயிருக்கும். இத்தகைய பேசுபொருட் கவிகளைப் புனைவதில் முன்னிலை வகிக்கின்ற ஒருவராகத் திகழ்கின்றார் கவிமணி அ.கௌரிதாசன்.

இலங்கையின் கவிப்பரப்பில் அதீத தேடலுடையவராகவும், அடுத்தவர் கவனத்தை ஈர்ப்பவராகவும் திகழ்கின்ற இவரது கவிப்பார்வை பரந்துபட்ட மனித நேயமுடையவையாக மிளிர்வதால் வாழ்வியல், உலகவியல், அகம், புறம் என்று விரிந்து செல்கிறது எழுத்துக்களின் கனதியும் செறிவும்.

கற்பனை வானிலும் நிஜவாழ்க்கையிலும் தாம் கண்ட, அனுபவித்த நிகழ்வுகளைக் கவிகளாக்கி மழையெனப் பொழியச் செய்வதில் இவருக்கு நிகர் இவரே என்று சொல்வது மிகைக் கூற்றல்ல.

கலப்படம் சேராத கருத்துக் குவியல்கள் இவரிடம் நிறையவே காணப்படுவதால் நல்லதொரு பன்முகப் படைப்பாளியாக இனங்காணப்படுகிறார். தமிழுக்கு தனயனாகி பா எழுதும் இப்பாவலன் பாரினில் என்றும் பேசப்படக்கூடிய ஒருவர். தமிழுலகம் உள்ளவரை நிலைத்திருக்கக்கூடிய கவிகளைத் தருவது இவரின் ஆளுமைகளில் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்முறுவல் பூத்த சொற்களால் ஒளிவு மறைவின்றி கருத்துச் சிதறல்களை முன்னிலைப்படுத்துகின்ற ஒரு அசாத்திய வேகம் இவரினுள் வேர்விட்டு நிற்கின்ற தனிச் சொத்தாகும். வாழ்வியல் கோலங்களை வடித்தெடுத்து வசீகரம் கொடுத்த கவியரசு கண்ணதாசன் போல தனது எண்ணங்கள் சிந்தனைகளால் கவிதை வெளியை வசமாக்கி ராஜநடை போடுகின்ற தனித்தன்மை கௌரியின் ஆற்றல்களை மேலும் அதிகப்படுத்துகிறது.

மாறுபட்ட விதத்தில் வாழ்வியல் கோலங்களை சித்தரித்து நிற்கின்ற கவிகள் ஆழ்ந்த அனுபவத்தையும் திறமையின் உச்சத்தையும் எடுத்துக் காட்டுகிறது. வாழ்வியலின் பல்பரிமாணங்களைக் கோடிட்டுக் காட்டும் இந்நூலில் இடம்பெற்றுள்ள கவிகள் கவியுலகின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

கவிமணி கௌரிதாசனின் ஆறாவது நூலாக வெளிவந்திருக்கிறது "என்னுயிரில் நீ பாதி" எனும் இந்நூல் இதன் இருப்பும் சிறப்பும் வாசக இதயங்களை வருடிச் செல்லும். வாழ்த்துச் சொல்லும்.

'என்னுயிரில் நீ பாதி' என்ற இந்த நூலின் ஆசிரியர் சும்மா வெறும் பேச்சுக்காக சொல்லவில்லை. தனது உயிரோடு ஒன்றித்து உணர்வாக, உறவாக, உயர்வாக இணைந்திருக்கின்ற உற்றதுணையாளரின் உயரிய பண்புகளைச் சொல்லுகின்றார்.

வாழ்க்கைப் படகில் பயணிக்கும் துணையானவள் எதிர்த்திசையில் சுக்கான் பிடிக்காமல் தனது மனமறிந்து செயல்பட்டதாக பெருமிதமடையும் கவிஞர் மேலும் தனது மன நிறைவினையே இலட்சியமாகக் கொண்டு வாழ்வதாகவும் கூறி சந்தோசமடைகின்றார். இந்த வகையில் சிறந்ததொரு வாழ்க்கைப் பங்காளியை வரவாகப் பெற்ற கவிமணி பாக்கியசாலிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானிலம் வாழு கின்ற
நல்லுயிர் அனைத்தி லேயும்
மானிடப் பிறவி யொன்றே
மகத்துவம் மிக்க தென்றார்!

கேள்வி எனும் கவிதையில் பல்வேறுபட்ட கேள்விக் கணைகளை மானிட சமூகத்தை நோக்கி முன்வைத்துள்ளார் கவிமணி. அவரது கேள்விகளில் பொதிந்து கிடக்கும் தத்துவமும் ஆதங்கமும் எவர் சிந்தையிலும் ஒரு கணம் பட்டுத் தொட்டுச் செல்லும் என்பது உறுதி மேல்நிலையில் உள்ள மனிதன் கீழான குணவியல்புகளுடன் வாழ்தலும் மனித நேயமற்ற செயற்பாடுகளும் அவரின் மன நிலையில் கவலையை தோற்றுவித்துள்ளமை இக்கவிதையின் மூலம் புலனாகின்றது.

இரவும் பகலும் இயற்கையின் நியதி
இன்பம், துன்பம் இதுபோ லன்றோ?
வரவும் செலவும் பேண மறந்தால்
வாழ்வில் எம்மை வே(சோ)தனை தொடரும் !

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தத்துவார்த்த அடிப்படையில் அமைந்திருக்கிறது. 'பணம் பொருள் தேடு' எனும் கவிதை வாழ்வியலின் வெற்றிப் படிகளில் ஒன்று திட்டமிட்ட வரவு செலவு. இதனை ஒழுங்காகப் பேணாதவர் அளவுக்கு மிஞ்சிய செலவீட்டினால் அல்லலுறுவதை அவதானிக்கலாம். அதனால் ஒரு கட்டுக் கோப்புக்குள் வாழ்வினை அமைத்துக் கொள்வது அவசியமாகிறது. தேடுகின்ற பணமும் பொருளும் உரிய முறையில் பாதுகாக்கப்படும் போது நலியாத வாழ்வு நிலைத்தோங்குமென கவிமணி கூறுகின்றார். சிந்தையைத்தொடும் தத்துவார்த்தக் கவியாக இது அமைந்துள்ளது.

வாழ்வா தாரமதை வளப்படுத்தும் நோக்குடனே
வழங்கி வைத்தார் விதவையர்க்கு மாடு – ஊரில்
பாழ்பட்டுப் போனசிலர் பாழிரவில் அவைதிருடிப்
பணம்கொள்ள முயலுவதோ கேடு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவு செய்வோரின் கேவலமான செயல், அடுத்தவர் வாழ்வினில் செலுத்துகின்ற ஆதிக்கம் எத்தகைய கொடுமையானது என்பதை 'திண்ணம்' எனும் கவிதை தெளிவுபடுத்துகிறது. உடல் வருந்தி உழைக்காமல் சொகுசாக வாழ்வதற்கு ஆசைப்படுவார். இரக்கமில்லா குணமுடையோர் என இங்கே சுட்டிக்காட்டப்படுகிறது.

இடர்கண்ட போதிலும் இருப்பிழந்த நிலையிலும் இரக்கம் காட்டாதவர் நிச்சயம் கேடுறுவார் என்பதையும் கவிமணி இக்கவியில் வலியுறுத்துகின்றார்.

இவ்வாறாக சிறந்த பல கவிதைகளை படைத்து, அவைகளை நூலாக்கி வைத்திருக்கின்றார். கவிமணி கௌரிதாசன் அவரின் தமிழ்ப்பற்றும் புலமையும் வியக்க வைக்கிறது. நிச்சயமாக இந்நாளிலும் பின்நாளிலும் இந்நூல் பேசப்படக்கூடியதாகவிருக்கும் என்று துணிவுபடக் கூறலாம்.

அவருக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள்.

**கலாபூஷணம் பீ.ரீ.அஸீஸ்**
**இலக்கிய வித்தகர்**
**43/3, பெரியாற்றுமுனை**
**கிண்ணியா - 07**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

'என் உயிரில் நீ பாதி' என்ற இந்தக் கவிதை நூல் எனது முந்நிய கவிதை நூல்களிலிருந்தும் சற்று வித்தியாசமானது. இந்நூலில் மொத்தம் 64 கவிதைகள் இடம்பிடித்திருந்தாலும், என் உயிரில் நீ பாதி'யென்ற தலைப்பேற்ற கவிதையை நூலின் பெயராகப் பதிவு செய்திருக்கிறேன்.

எனது எழுத்துலகப் பிரவேசத்துக்கு என்றும் மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய குருநாதர்கள் அத்திவாரத்தினை இட்டிருந்தாலும் எழுதும் பணி இடையிலே நின்றுவிடாமல் தொடர்ந்து செல்ல உந்துசக்தியாக இருந்து அல்லும் பகலுமெனை அரவணைத்து மேலான ஒத்தாசை வழங்கிய அன்பு மனைவிக்கு நான் வழங்கும் காதற் பரிசாக அணிந்து மகிழும் மணி மகுடமே 'என் உயிரில் நீ பாதி'

இந்த நூலிலே இடம்பெற்ற கவிதைகள் அனைத்தும் அவ்வப்போது வார இதழ்களிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரம் பெற்றவைகள்தான். என்னைப் பாதித்த, என்னைச் சோதித்த, என் பார்வையில்பட்ட, என் இதயத்தை தொட்ட, என் இதயத்தைச் சுட்ட, சிந்தனையைக் குழப்பிய, கற்பனையை புதுக்கிய தரிசனங்கள், அனுபவங்கள் இவை தவிர பிறரது அனுபவங்களைக்கூட தொட்டிருக்கிறேன். கற்பனையைப் பெரிதாக வாஞ்சிக்காமல் சத்தியத்தை மட்டும் கவிதை எனும் கட்டுக்கோப்பு குலையாமல் சீர்செய்ய முடிந்தளவு முயன்றிருக்கின்றேன்.

சில கவிதைகள் பலருக்குப் பிடித்ததாயும், பல கவிதைகள் சிலருக்குப் பிடிக்காததாயும், பலத்த விமர்சனத்துக்குரியதாகவும் வாசகர்களின் பாராட்டுக்குரியதாகவும், படிப்பினையூட்டக்கூடியதாகவும் இருக்கலாம். எது எவ்வாறு இருந்தாலும் நானொரு படைப்பாளி என்ற வகையில் எனது பார்வையில் அவை யாவும் நிகழக்கூடிய சம்பவங்களே. இந்தச் சம்பவக் கோர்வையோடு எனது சத்தியமும் கைகோர்த்து நிற்கின்றது என்பதனை மீண்டும் அடக்கமாகத் தெரிவிக்க ஆசைப்படுகின்றேன். உங்கள் மேலான கருத்துக்களுக்கு என்றும் மதிப்பளிக்கும் நான்

அன்புடன்

**அ. கௌரிதாசன்**
**15.05.2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- தாய்க்குப் பின் தாரம் ........ 1
- கேள்வி ........ 3
- உள்ளம் களி கொள்ளும் ........ 5
- இறைஞ்சுகின்றோம் ........ 7
- வாழ்த்தி வணங்குகிறேன் ........ 8
- கலைப்பணி தொடருமா? ........ 10
- பார்வைகூடப் படவில்லை ........ 12
- மனிதர் மதிக்கும் புனிதன் ........ 14
- பணம் பொருள் தேடு! ........ 16
- பரிதாபம் ........ 17
- திண்ணம் ........ 18
- அத்தனையும் மாயம் ! ........ 19
- கலங்கரை விளக்கமாய் விளங்கு ........ 20
- எனக்குப் பிடித்த சிலை ........ 21
- புது மனிதன் ஆகிறேன் ........ 22
- இரா விருந்து ........ 24
- ஒழியட்டும் ! ........ 26
- கதிர்காமப் பயணிகள் போல் ........ 28
- புதினம் ........ 30
- இன்னல் தொடும் வாழ்வு ! ........ 31
- அழகில் மனம் தோயும் ........ 32
- சங்கு ஒலிப்போம் ! ........ 33
- விதி ........ 34
- திருநாள் என்றோ? ........ 35
- தமிழ் மறவேன் ! ........ 36
- சி(பி)த்தம் தெளி ........ 37
- வாழ்ந்திட வாழ்த்துகின்றேன் ! ........ 38
- அன்பால் புவியை ஆளப்பார் ! ........ 40
- எல்லோரும் பங்காளர் ........ 41
- என்ன இலாபம்? ........ 43
- கவிதை நெஞ்சம் ........ 45


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வயது செய்யும் கோளாறா? ........ 46
- வானம் தொடும் ........ 47
- உயர்ந்த பூசை! ........ 48
- வேறென்ன கண்டான்? ........ 50
- உலகம் வாழ்த்தும்! ........ 52
- பெறுபேறு ........ 53
- வாழ்வதா, சாவதா? ........ 55
- மந்திகளின் அரசாங்கம் ........ 57
- ஆனந்தம் அளித்தாலென்ன? ........ 59
- காசினைப் போற்றும் காசினி ........ 60
- கவிஞன் யான் என்னபாட ........ 62
- சாதனை படைத்து வெல்வோம் ........ 63
- மனவருத்தம் ........ 66
- நூறாண்டு காலம் வாழ்வான்! ........ 68
- ஈ கூடப் பறக்கவில்லை ........ 70
- கணக்காயர் தலை சொறியும் காலமது மாறாதா? ........ 72
- தீர்ப்பு ........ 74
- பழி ஓயுமா! ........ 76
- நீதிக்கே தலை சாய்ப்பேன்! ........ 77
- வெளிச்சம் என்று கிடைக்கும்? ........ 78
- என் உயிரில் நீ பாதி! ........ 80
- நளினங்கள் காட்டுகிறாள்! ........ 83
- வா(பா)ழ் வளவு ........ 84
- யார் தடுப்பார்? ........ 86
- காதல் வாழ்வினில் கவலை வந்தது! ........ 87
- பருவ விழா ........ 88
- பெருமைக்குரிய தலைவன் ........ 90
- விடை கிடைக்கவில்லை! ........ 92
- கண்ணீர் ........ 94
- நிழல் போச்சே! ........ 96
- நான் ........ 98
- மரண பயம் ........ 100
- மழலையால் மகிழ்ச்சி கொள்ளை ........ 101


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ தாய்க்குப் பின் தாரம்

தாய்க்குப் பின் தாரம் என்றார்
    தரணியில் அவள் எனக்கு
வாய்த்ததால் இளைஞன் போலும்
    வாலிப மிடுக்கி னோடும்
நோய்நொடி பற்றா வண்ணம்
    நுவலொணா வாழ்க்கைக் காவில்
சேய்களோ நால்வர் கண்டு
    சிறப்புடன் வாழுகின் றேன் !

சீதனம் தேடி ஓடும்
    சிறுமதி பற்றா வாறு
சாதனை யாளன் ஆகச்
    சரித்திரம் தோற்றுவித்து
காதலாய் கனிவாய் அன்பு
    கருணையும் சேரும் பாங்கில்
வேதனை அண்டா வண்ணம்
    விருப்புடன் வாழுகின்றேன் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவிலாக் கவிதை தீட்டும்
குரிசிலாய் நான்வி ளங்க
பொறுமையின் இலக்கணமாய்
புவிமிசை வாழும் பூவை,
அறுசுவை அடிசில் தந்து
அனுதினம் எந்தன் தேவை
சிறப்புறத் தீர்த்து வைப்பாள்
சீருடன் வாழுகி ன்றேன் !

வள்ளுவன் தனக்கே வாய்த்த
வாசுகி போலும் வாழ்வில்
உள்ளத்தால் உடலால் ஒன்றி
உயிரென எனைம திக்கும்
நல்லவள் மனைவி யாக
நான்பெற வரமே செய்தேன்,
எள்ளெனில் எண்ணை யாவாள்
இன்பமாய் வாழு கின்றேன் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ கேள்வி

நானிலம் வாழு கின்ற
    நல்லுயிர் அனைத்தி லேயும்
மானிடப் பிறவி யொன்றே
    மகத்துவம் மிக்க தென்றார்!
மானிடர் பலபே ரிங்கே
    மற்றுள விலங்கின் கீழாய்,
ஏனின்று வாழு கின்றார்
    என்பதே எந்தன் கேள்வி?

அரமெனக் கூர்மை மிக்க
    அறிவிலே ஆறு பெற்றே
நரம்பினால் ஆன தாலே
    நரரென நாமம் பெற்றும்,
வரம்புகள் போட்டு வாழும்
    வாழ்வினைத் தொலைத்து விட்டு
குரங்கிலும் கீழாய் வாழும்
    கொள்கையேன், இதுவென் கேள்வி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கற்று புவிம திக்கும்
  நுண்ணறி வெல்லாம் பெற்றும்
வாழ்விலே தங்கள் மேலாம்
  வசதிகள் – வாய்ப்புக் காக,
கீழ்நிலை யுற்று; தூற்றும்
  கேவலம் மிகுந்த வாழ்வைக் –
கால்நடைக் கூட்டம் போலும்
  கவர்வதேன், எந்தன் கேள்வி!

மாடுகள், மரைகள், மான்கள்
  மந்திகள், நாய்கள், கற்ப –
வாடைதான் நுகர்ந்த பின்னர்
  வலிந்துபோய் எந்த நாளும்,
கூடுவ தில்லை! மாந்தர்
  குழவிதான் பிறக்கு மட்டும்
கூடலைத் தொழிலாய்க் கொள்ளும்
  கோலமேன்? எந்தன் கேள்வி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ உள்ளம் களி கொள்ளும் !

என்னூரில் ஆலை மரம்
  எங்கும் விழு தெறியும் !
பன்னீர் பூச் சொரியும்
  பழ மரங்கள் கனி சொரியும் !
நன்னீர்க் கிணற் றோரம்
  நல்வாழை குலை தெரியும் !
கண்நூறு வேண்டும், எழிற்
  காட்சிகளை ரசித் திடவே !

தேன் சொட்டும் மலர்களிலே
  தேனீக்கள் தேன் அருந்தும் !
மாஞ்சோலைக்(கு) உள்ளிருந்து
  மணிக்குயில்கள் இசை பாடும் !
பூச்சிட்டு, புலுனி, அணில்
  புறா, கிளிகள், மைனாக்கள்
வாஞ்சையுடன் மரங்களிலே
  வந்தமர்ந்து கதை பேசும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமரம் அனைத் திலுமே
பசுந்தோகை மயில் கூடும்!
எட்ட முடியாத வானில்
எங்கணுமே வல்லூறு
வட்டமிடும் ! வெள்ளெலிகள்
வளைவிட்டு வெளியில் வரும் !
வெட்டவெளி சிறுவர்களின்
விளையாட்டு அரங்காகும் !

மதியொளியில் அல்லி மலர்
மலர்ந்தே முகம் காட்டும் !
அதிசயத்தை பரவசத்தை
அள்ளிவிட மனம் துள்ளும் !
கதிரவனும் கதிர் பரப்பிக்
கங்குலினை விரட்டு கின்ற
அதிகாலைப் பொழுதினிலே
ஆலயத்தில் மணி ஒலிக்கும் !

ஆற்றோரம் வெண் கொக்கு
ஆயிரமாய் அணி வகுக்கும் !
பாற்பசுக்கள் புல் வெளியில்
பௌவியமாய் மேய்ந்து வரும் !
நாற்றுக்கள் நெல் வயலில்
நடனமிடும் ! கண்கொள்ளாக் –
காட்சிகளைக் கண்டு கண்டே
'களிகொள்ளும் எந்த னுளம் !'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ இறைஞ்சுகின்றோம் !

வையகத்தை விரிவாகப் படைத்து மேலே
வானமதைக் கூரையென விரித்தாய் தேவே !
கைகூப்பி உனைவணங்கும் பக்தர் தம்மைக்
காத்தருள வேண்டுகிறேன், கருணைக்கோவே !

பொய்மலிந்து உலகினிலே போடும் ஆட்டம்
புன்மைகளைத் தோற்றிடவே பிறந்த கூட்டம்
செய்வதெலாம் சிரசினிலே பாரம் ஏற்றும்
செய்யவழி இலையிறையே, உண்டா மாற்றம்?

ஐந்தொழிலுக் குரியவனே, ஆற்றல் மிக்கோய்
ஆட்டுவிக்கும் அரியகலை வல்லோன் நீயே !
சிந்தனைகள் தூய்மைவழி சிறக்கச் செய்வாய்,
செகமாந்தர் சிறுமைகளை மறக்கச் செய்வாய் !

மழலைகளும் நடமாட முடியாக்காலம்
மங்கையரை வன்புணரும் கொடியோர் கோலம்
இழவடித்து இடுகாடாய் மாற்று முன்னர்
இறையேநீ, இதற்குவிடை காணச் செய்வாய் !

நீதிநெறி நிலம்மீது வாழச் செய்து
நீசர்களின் தலைதேர்ந்து நீயே கொய்து
சோதியினை உலகுக்கு உண்டு பண்ணாய்
"சோதிவடி வானவனே, இறைஞ்சுகின்றோம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்தி வணங்குகிறேன்

ஏழ்மையில் எனையே வைத்த
ஏகனை வணங்கி நிற்பேன் !
வாழ்வினில் பலபேர் தம்மின்
'வடிவங்கள்' தெரியத் தந்தாய் !

'உறவுகள் தனைநிறுக்கும்
உயரிய கோலைத் தந்தாய் !'
திறம்பட தெளிவு காண
தேவனே 'மதி'யைத் தந்தாய் !

கூழொடு கஞ்சி தன்னைக்
குடித்துமே வாழ்ந்த போதும்,
பாழ்படும் கொடுமை செய்யாப்
பகுத்தறி வெனக்குத் தந்தாய் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசினைத் துதித்து வாழும்
    கஞ்சல்கள் சமுகம் தன்னில்
காசினைத் தூசி என்னும்
    'கௌரவம்' எனக்குத் தந்தாய் !

பட்டினி பழகிப் போயும்
    பருத்தவென் உடலம் காய்ந்தும்
'கட்டுரை' இழக்கா நிற்கும்
    கவிஞனாய் மாண்பு தந்தாய் !

பொன்னையே பெரிதாய் எண்ணும்
    பூவையர் தம்மில், மேலாய் –
'என்னையே நி(ப)தியாய் எண்ணும்
    ஏந்திழை துணையாய்த் தந்தாய் !

நல்லுரை வழங்கும் அன்பு
    நண்பரைப் பரிசாய் தந்தாய் !
"வல்லவா, உன்னை யென்றும்
    வாழ்த்தியே வணங்கு கின்றேன் !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ கலைப்பணி தொடருமா?

இட்டமாய் கடக இராசி
இன்பலன் பார்த்தேன் ! அன்னார்
தொட்டது யாவும் பொன்னாய்த்
தோன்றுமாம், உண்மை தானா?
கெட்டதாம் குடியால் நானும்
கெட்டவன் ! அதை விலக்கி,
விட்டவன் ! மீண்டும் மேன்மை –
வேறெலாம் ஒட்டுந் தானா?

சிதைவிலாச் செல்வம் வந்து
சேருமா? நான் வகிக்கும்
பதவியில் உயர்வு என்னைப்
பற்றுமா? கடல் கடந்து,
நிதி தனம் தேடிக் கொள்ளும்
நிலைமைகள் வருமா? முன்னர் –
உதவிகள் தர மறந்தோர்
உதவிட வருவார் தானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடிகள், மனைகள் வந்து
    மகிழ்வுறச் செயுமா? இல்லை
கோடியாய் செல்வம் சேரக்
    கொள்கையும் கெடுமா? நேர்மை
ஓடியே விடுமா? வாழ்வில்
    ஒருதுணை போதா தென்றே –
நாடுமா பிறிதோர் மாதை?
    நல்லவர் தூற்று வாரோ?

குணமுமே மாறு பட்டுக்
    கொள்ளுமா? கைப்பிடித்த
மனைவியும் அயலா ரோடு
    முன்னர்போல் பழகு வாளா?
பணத்திமிர் என்னை வந்து
    பற்றுமா? இலக்கியங்கள்
கணமுமே படைக்கு மென்றன்
    "கலைப்பணி தொடருந்தானா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ பார்வைகூடப் படவில்லை

குடும்பத்தில் கடைசிப் பிள்ளை
"குலமணி" ! இளமைக் காலம்
குடுகுடு என்று ஓடிக்
குதூகலம் ஊட்டி நிற்பாள் !

கற்றிடும் போதில் எல்லாம்
கலைவிழா, விளையாட்டென்று,
வெற்றிகள் பலவும் பெற்ற
வீரிதான்; மிகையே இல்லை !

அண்ணன்மார் இருவ ரோடும்
அக்காமார் மூவரோடும்
மண்ணிலே வாழ்ந்தி ருந்தாள்
மகிழ்ச்சிக்குப் பஞ்சமில்லை !

காலத்தின் சுழற்சி தன்னில்
கடிமணம் அவளும் செய்தாள் !
"சூரிய குமார்" என்னும்
சுந்தரன் துணையாய் வந்தான் !

ஓட்டினாள் வாழ்வுத் தேரை
ஒருநான்கு வருடம் போயும்
மாட்சிமை மிக்க வாழ்வில்
மழலையும் கிடைக்க வில்லை !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தொழில் தன்னில் நாளும்
    சிக்கல்கள் கூடக் கூட,
தெய்வத்தை நொந்தா ளன்றி
    தொல்லைகள் எவர்க்கும் நல்காள் !

இப்படி வாழும் போதில்
    இடையிலே நோயும் பற்றி
செப்படி வித்தை காட்ட
    செய்வது அறியா நின்றாள் !

பெறாமக்கள் இருவ ரோடும்
    பிரியமே வைத்தி ருந்தாள் !
வராது போனார் மற்றோர்
    வளமிலா நிலைமை கண்டே !

அக்காமார் இருவர் தாமும்
    அயலிலே இருப்ப தாலே,
சிக்கல்கள் இல்லை ! ஆனால்
    சிரிப்புத்தான் முகத்தில் இல்லை !

'நோர்வே'யில் மூத்த அக்கா
    நோவின்றி வாழ்ந்த போதும்
'பார்வைகள் இவளின் பக்கம்
    படவில்லை இந்நாள் மட்டும் !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ மனிதர் மதிக்கும் புனிதன்

சந்திர னுக்கு மனிதன் செல்லச்
சால்பு கொடுத்தது விஞ்ஞானம் – இவன்
சந்ததி சந்ததி நித்தமும் அடிபிடி
சண்டை பிடிப்பது அஞ்ஞானம் !

அதரம் பதித்த குழவிகள் அழுதால்
அணைக்கும் நிலையே தாயன்பு – தன்
உதிரம் தனையே பாலாய் நாளும்
ஊட்டி வளர்ப்பது அவளன்பு !

இல்லை யென்று வள்ளல் இல்லில்
இரப்போன் நாமம் இரவலனாம் – கையில்
உள்ள பொருளை உள்ளன் புடனே
உவந்து அளிப்போன் புரவலனாம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டிப் பணமே குட்டி போடும்
    வாய்மை மறந்தார் செய்களவு – இதைத்
தட்டிப் பறிக்கும் தன்மை மிக்கார்
    தருணம் பார்ப்பது தான் உளவு !

கட்டிய மனைவியும் கணவனும் கூடிக்
    களிக்கும் நிலையே உடலுறவு – சில
மட்டி மடையர் விரும்பா நிலையில்
    மங்கையை நெருங்குதல் வல்லுறவு !

அடக்கு முறையும் அசுரத் தனமும்
    அரசன் நீதிக்கு ஆகாது – அவன்
அடக்கி அடிமை போல மதித்தால்
    அந்தக் களங்கம் போகாது !

அன்பு தயவு தன்னை நினைத்து
    அவனியில் வாழ்ந்தால் அவன்மனிதன் – இந்த
மண்ணை நீத்து மறுவுல கேகினும்
    மனிதர் மதிக்கும் ஒரு புனிதன் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ பணம் பொருள் தேடு!

இரவும் பகலும் இயற்கையின் நியதி
இன்பம், துன்பம் இதுபோ லன்றோ?
வரவும் செலவும் பேண மறந்தால்
வாழ்வில் எம்மை வே(சோ)தனை தொடரும் !

அக்கா தங்கை, அண்ணன் தம்பி
அனைத்து உறவும் பணத்தா லன்றோ?
தக்கார் தகவோர் பொய்யே, காசுத் –
தாளது இன்றேல் இன்னல் படரும் !

கூடிச் சிரிக்கும் நண்பர்கள் வாழ்வில்
கூடி வாழ்ந்த தாரமும் தூரம்,
ஓடிப் போவார்! ஒதுங்கிக் கொள்வார்
உன்நிலை தாழ்ந்தால் உன்னயல் நில்லார் !

நடைப்பிணம் போலும் நானிலம் மீதில்
நலிவுகள் கண்டு வாழ்ந்திட நேரும் !
தொகைப்பணம் கையில் இருந்தால் கழனி
தோட்டமிருந்தால் உறவுகள் சேரும் !

உன்னிடம் பெற்று வாழ்ந்தவர் கூட,
உன்நிலை நலிந்தால் உதவிட வாரார் !
இன்னிலம் மீதினில் வாழும் வரைக்கும்
இலட்சியம் கொண்டு "பணம், பொருள் தேடு !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ பரிதாபம்

சுள்ளென்று தேகமதைச் சுட்டெரிக்கும் வெய்யில்
நில்லென்று நேரிழையை வழிமறிக்கும் வாகைமரம் !
செல்லும் மார்க்கமின்றிச் செல்லுகிறாள் ! கையிலொரு
கைக்குழந்தை யோடு காதவழி செல்பவள் யார்?
இல்லமொன்று சொந்தமென இல்லாத ஏழையவள் !
மெய்போர்த்தும் கிழிந்த மேலாடை; பாதணியும்
இல்லாத பாதங்கள் எத்தூரம் நடந்திடுமோ?
எல்லாமும் இவளுக்கு இறைதந்த சீதனமோ?
கோளமெனும் புவிப்பந்தில் குடிசையிலே வாழ்ந்தாலும்,
வாழவே பிறந்தாள் ! ஒருவாலிபனோ இவளழகை
ஆளவே பிறந்ததாய் ஆனந்தம் வரும் வகையில்,
உதிர்த்தமொழி செவிகளிலே ஊட்டிவிட்ட பெருமகிழ்வில் –
குளித்தாள் ! பெறுபேறோர் குழந்தைக்குத் தாயானாள் !
"விழிபோலும் உனைக்காப்பேன் விடமாட்டேன் கை"யென்று,
களித்து மகிழ்ந்தவனும் கைகழுவி விட்டுவிட்டான் !
பழிபாவம் அறியாதாள்; வாழுமொரு நிலையறியாள் !
பார்ப்பவர்கள் விழிகளுக்கு பருவத்து விருந்துதரும்
பேரழகி ! அவளில் மிகப் பிரியம் மிகுந்தவர்கள்
வலைவிரித்தார். முந்தானை விரிப்பாள் எனவெண்ணி !
விலை குறிக்க நின்றவரை மெய்சிலிர்க்க வைத்ததுபோல்,
நிலை குலையாள் ஆடவர்முன் நின்றாள் நாகமென...
சீறினாள், சினந்தாள் சிற்றின்பம் தேடிவந்தோர்
ஓடினார், ஒளிந்தார் ! உருவிலவள் கண்ணகிபோல்,
தெரிந்தாள் ! இருந்தும் ஊர் கண்களிலே தெரியாமல்
தெரியாத இடம்நாடி நடக்கின்றாள் "பரிதாபம் !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திண்ணம்

வாழ்வா தாரமதை வளப்படுத்தும் நோக்குடனே
வழங்கி வைத்தார் விதவையர்க்கு மாடு – ஊரில்
பாழ்பட்டுப் போனசிலர் பாழிரவில் அவைதிருடிப்
பணம்கொள்ள முயலுவதோ கேடு !

வறுமையதன் கோட்டுக்குள் வாழுகின்றோர் விழிநீரை
வடிக்கின்றார், இடுகின்றார் ஓலம் – பற்றி
எரிகின்ற வீட்டினையே அணைக்காமல் குறியாக
எவரப்பா தேடிடுவார் லாபம்?

உடல் வருத்தி உழைக்காமல் ஒயிலாகத் திரிவதற்கு
உலகினிலே பலருக்கு ஆசை – எவர்
இடர்கண்ட போதினிலும், இரவினிலே போகையிலும்
இரக்கமிலார் பறித்திடுவார் காசை !

நீபார்க்க விலையெனினும் நெடுந்தொலைவில் இருந்திடினும்
நிமலனவன் பார்க்கின்றான் உன்னை – அவன்
தீயாவான் – நீராவான் – திசையெட்டும் காற்றாவான்
கூற்றாகி, உயிர்கொள்வான் உண்மை !

பால்விற்றுப் பணம்பெற்று முன்னேற்றம் கண்டிடவே
பாவமவர் கொண்டிருந்தார் எண்ணம் – அந்த
வாழ்விழந்த விதவையவர் உகுக்கின்ற கண்ணீரோ
வாளாகி, வீழ்த்துமுடல் திண்ணம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ அத்தனையும் மாயம் !

பொங்கலுக்காய் அறுவடைக்குக் காத்திருந்த
பொன்வயலும் வெள்ளத்தால் அழிந்து சாக
வங்கியிலே வைத்தநகை பத்து (இ)லட்சம்
வட்டிகட்ட முடியாமல் 'ஏலம்' போக,
தங்கைக்காய் சாட்டிவிட்ட 'மாடு' கன்று'
தவணைமுறைக் கொன்றாக இறந்துபோக
பங்கமிலா உறவுகளும் நீதிமன்றப்
படியேறிப் பணத்துக்காய் உயிரை வாங்க....

கந்தோரில் பணிபுரிந்த நண்பர் கூட்டம்
கண்டபடி மேலிடத்தில் அள்ளி வைக்க
சந்ததியாய் செய்துவந்த கோயிற் பூசை
சடுதியிலே பிறிதொருவர் கைக்கு மாற,
விந்தைமிகு விதமாகப் பிள்ளைகுட்டி
வீட்டினிலே 'புரளி'களை உண்டு பண்ண
எந்தனது பிள்ளைகளும் எதிர்மாறாக
என்மீதே குறைகூறித் திட்டித் தீர்க்க...

'ஊர்த்தலைமைப் பதவியது விட்டுப் போக
ஊர்வாய்கள் ஒரு விதமாய் தொட்டுப் பேச
பேர்த்திகளும், பேரர்களும் பழசு என்றே
பேர்வைத்துக் கூத்தாடித் தாளம் போட,
வார்த்தைகளில் வழங்கிடவே இயலா வண்ணம்
வாழ்வினிலே துயர்பற்றி எனையே வாட்ட
நீர்த்திவலை கண்களிலே பனிக்கும் நேரம்
நினைக்கின்றேன், இவ்வுலகில் அனைத்தும் மாயம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ கலங்கரை விளக்கமாய் விளங்கு

ஒருசதம் உழைப்பிலை எனும்நிலை வருகையில்
உயிரதை விட்டிடல் மேன்மை ! – நிதம்
திருமதி மழலைகள் தருதுயர் வன்முறை
தாங்கியும் வாழ்வதா ஆண்மை?

பரந்தஇவ் வுலகினில் பலதொழில் இருக்கையில்
இரந்துநீ வாழ்வதா வாழ்க்கை? – உயிர்
நிரந்தர மில்லையென் றறிந்தபின் வாழ்ந்திட
நினைப்பதேன்? மாற்றிடுன் போக்கை !

ஊரவர் நகைத்திட நீ கரம் நீட்டியே
உதவிகள் பெறுவதை நிறுத்து ! – உனது
பேரது உலகினர் வாயினில் ஒலித்திட
பெருமையாய் வாழ்வினை நடத்து !

மண்ணக வாழ்வினில் வாழ்ந்திடு வரையிலும்
மனிதரின் தேவைகைப் பொருளே ! – அந்த
விண்ணக வாழ்வினில் நீயிடம் பெற்றுமே
விளங்கிட மூலமும் அருளே !

உலகினர் போற்றிட உத்தம னாகநீ
உண்மையின் வழியிலே துலங்கு ! – காட்டு
விலங்குகள் போலவே வாழ்வதா? "கலங்கரை
விளக்கமாய் புவியினில் விளங்கு !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ எனக்குப் பிடித்த சிலை

அச்சடித்த சித்திரம்போல் அங்கம் வாய்த்த
    ஆரணங்கின் அகலங்கள் கமலமொட்டு !
மச்சமது கொண்டவளின் கன்னம் தானும்
    மாங்கனியின் வனப்பினையே காட்டிநிற்கும் !

பட்டுவிரல் வெண்டிக்காய்; நகங்க ளெல்லாம்
    ’தின் கீற்றாகும், குறங்கு வாழை !
மட்டுநிகர் சுவைநல்கும் இதழ்கள் கொவ்வை
    மங்கைநுதல் பிறைநிலவின் வடிவமாகும் !

நெளி கூந்தல் கருமேகம்; ஒளிரு கின்ற
    நித்திலத்தை ஒத்ததுவே அழகுப் பற்கள் !
களிசேர்க்கும் காரிகையின் கைகள் காந்தள்
    கழுத்தழகு வலம்புரியாம் கடல்வாழ் சங்கு !

மயிலொத்த சாயலுள்ள மங்கை யாளின்
    மணிமொழிகள் முக்கனியின் தோயலாகும் !
பயிலுதற்கு ஏற்றபடி காதற் பாடம்,
    பாழிரவில் கற்பிக்கும் ஆசான் ஆவாள் !

மருளுகின்ற மான்விழியாள் எந்தன் தேவி
    மங்கையிவள் பின்னழகு சொக்கிப்போகும் !
சிரிப்பழகு சித்தத்தை சிறை பிடிக்கும்
    சிலையவளை எந்தனுக்கு மிகப்பிடிக்கும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ புது மனிதன் ஆகிறேன்

'காவலாளி தேவை' யெனக்
கண்டேன் ஒரு விளம்பரம்'
ஆவலோடு சென்றே னங்கு
அன்றை நாள் 'சுயம்வரம்'

உடல்வாகு, அகவை நிலை
உயர மெல்லாம் பார்த்தனர் !
கடமைக்குத் தகுதி யென்று
கண்டு, பணியில் சேர்த்தனர் !

கழிந்து விடின் மாதம் ஒன்று
கையினிலே பணம் வரும் !
செழிப்புஇனி வாழ்வி லெனச்
சிந்தையிலே களி தொடும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைவனுக்கோர் தொழிலு மில்லை
தொட்டவளின் மனக்குறை !
மனைவியவள் உழைப் பினிலே
வாழுவதும் சிறப் பிலை !

மாலைதொட்டுக் காலை வரை
மணிவிழிகள் விழித்திடும் !
வேலையினைப் பார் என்றென்
உறவுகளும் பழித்திடும்!

பசிதாகம் இல்லை யெனில்
பார்வாழ்வு இனித்திடும்
பசிபோக்க வகை யின்றேல்
பார் வாழ்வே கசந்திடும் !

ஆதலினால் காவல் செய்ய
அடியவன் யான் போகிறேன் !
பூதலத்தில் பணம் தேடப்
'புது மதனின் ஆகிறேன் !'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரா விருந்து

பரிசளிப்பு விழா நிகழ்ந்த
பள்ளியிலே நள்ளிரவில்
அரியதொரு பெருவிருந்தில்
ஆசிரியத் திலகங்கள் !
சிரிப்போடும் களிப்போடும்
செப்பரிய விதம், அவர்கள்
பொரியல், கறி சுவைத்தபடி
போட்டனராம் நிறை தண்ணி !

வழிதவறிப் போகாத படி
வழிகாட்டும் உத்தமர்கள்
வெளிநாட்டு மதுப்போத்தல்
பியர் சகிதம் இருந்தனராம் !
குளிர்பானம் தான் கலந்து
குடிமுழுக நின்ற னராம் !
ஒளியாமல் உரைத் திட்டால்,
ஊருக்கா உபதேசம்?

ஆசு இரிந் தவரை
ஆசிரியர் எனச்சொன்னார்
மாசுகளை நீக்க வல்லோர்
மகத்தான குரு நாதர்
சட்டத்தைப் பிய்யாதோர்
சட்டம்பி என்றாகி –
மட்டற்ற சேவை யினால்
மகத்துவங்கள் பெற்றவராம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகையோர் பட்டியலை
    இழிவு செய்யும் விதமாக
பட்டங்கள் பெற்று வந்தோர்
    பல்கலையும் ஆய்ந்த வர்கள்
இட்டம்போல் நடத்தி வைத்த
    இரா விருந்தைக் கண்டவர்கள்
மட்டமாய் பேசுகின்றார்
    மறுதலிக்க எவரு மில்லை !

இருபாலார் பயிலு கின்ற
    இனிதான பள்ளி தனில்
ஒருபொழுதும் நடக்காத
    ஒழுக்கச் சீர் கேடுகளைத்
தெருவினிலே பெற்றோர்கள்
    தினம் கூடிப்பேசு கிறார் !
அருந்தலைமை அதிபருக்கே,
    ஆம், சொன்னால் வில்லங்கம் !

ஊரிலுள்ள சங்கத்தார்,
    ஒன்றாகத் தான் கூடி
பேரெழுதி ஒப்ப மிட்டு
    பிட்டிசமாய் மேலிடத்தார்
பார்வைக்கு அனுப்பி வைக்கப்
    பம்பரமாய் சுழலுகிறார் !
சீர்பெறுமா கல்வி? இனிச்
    சித்திகளும் பூச்சியமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ ஒழியட்டும் !

சட்டம் போட்டுத் தடுத்தார்கள்
    சட்டம் ஓட்டை ஆகியதால்
திட்டம் எதுவும் வெற்றிபெறா
    திருத்தும் வேலை முற்று பெறா !
கற்றுத் தேர்வில் ஊர்மானம்
    காக்க வேண்டும் எனும் ஆவல்
பெற்ற துடிப்பாம் இளைஞர்அணி
    பெறுமா வெற்றி : இது கேள்வி?

அரச படைகள் அறியாமல்
    அயலோ ருக்கும் தெரியாமல்
இரவில் கசிப்பு தனைக்காய்ச்சி,
    எங்கும் விற்பனை செய்வதனால்
பிரபுபோல இவர்க ளெலாம்
    பிரச்சினை யற்று வாழுகிறார் !
வரவில் குறைந்த தினக்கூலி
    வடியால் தினமும் மடிகின்றான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதவை வயிற்றுப் பசிக்காக
விற்பனை செய்தாள் ! இன்றெல்லாம்
மலைபோல் கணவன் உள்ளவளும்
மானம் தொலைய, கசிப்பதனை
விற்பனை செய்து சுகமாக
வீடுவாசல் பெரி தாக்கி
சற்றும் சஞ்சலம் இல்லாமல்
சகத்தில் வாழும் நிலைகாணீர் !

பள்ளிக் கூட மாணவனும்
பக்கத் துணைக்குத் தந்தையுடன்
துள்ளிக் குதித்து ஓடுகின்ற
துயராம் நிலைமை தொடருமெனின்,
சொல்வேன் அவர்கள் எதிர்காலம்
சொல்ல முடியாப் பாதாளம் !
நல்லோர் சேவை தொடரட்டும்
நாட்டில் "கசிப்பு ஒழியட்டும்" !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ கதிர்காமப் பயணிகள் போல்...

அங்கிங்கு எனாத படி
எங்கும் 'வங்கி ஊழியர்கள்'
தங்கிவிட்ட கடன் நிலுவை
தனைப்பெறவே ஊர்வலமாய்...
'பட்டியலின் பெயர்' கேட்டு
பாவம், அவர் வருகையிலே
எட்டியே மறை கின்றார்
எடுத்த 'கடன்' கட்டாதோர் !

இலங்கைவங்கிக் கடன் பெற்று
இதயம் குளிர்ந்த வர்கள்
கலங்க வைத்து இடையினிலே
கைவிரித்த காரணத்தால்
இல்லத்தை நாடி வந்தோர்
இன்னல்நிலை காண்பதனை
எல்லோரும் அறி வாரோ?
இறைவனே இதை யறிவான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடாடு வளர்த் திடவும்
மனைப் பயிர்கள் செய்திடவும்
கோழியது வளர்த்திடவும்
கொடுத்திட்ட கடன் பெறவே,
தேடிவரும் வேளை யினைத்
தெரிந்து வைத்த 'கடனாளி'
ஓடியே ஒளித் திடுவான்
ஒருவருமே வீட்டில் இல்லை !

பாலர்களைப் பொய்யு ரைக்கப்
பழக்குகின்ற பெற்றோர்கள் –
சீலத்தைக் காணுகின்றார்
செய்யவழி தெரியாமல்...
"ஏ.சீ" க்குள் இருந்த வர்கள்
எரிக்கின்ற வெய்யிலிலே,
கால்நடையாய் திரிகின்றார்
"கதிர்காமப் பயணிகள் போல்!...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ புதினம்

மூப்புநரை திரையென்ற பேச்சு – இது
முதுமைக்கு அடையாள மாச்சு !
காப்பளிக்கும் கருமைநிறப் பூச்சு – இன்று
கைக்கொள்ளல் சிலர்வ(ப)ழக்க மாச்சு !

தலை கறுப்பால் பார்வைக்குக் குமரி – அந்த
தையலுக்கு மூவிரண்டு குழவி !
தலைப்பூச்சு இல்லையெனில் கிழவி – இந்த
தரணியெங்கும் திரிகின்றாள் உலவி !

போலிநகை தேகத்தில் சூடி – மேலும்
பொலிவாக வசீகரத்தைத் தேடி,
வாழுமிவள் போடுகிறாள் சட்டை – காணும்
வாலிபர்கள் விழிகளுக்கு பெட்டை !

சாயத்தில் மறைந்ததவள் மேனி; – அகவை
சகமிப்போ காண்பதெல்லாம் போலி !
மாயந்தான் இவ்வுலக வாழ்க்கை ! – ஆம்
மறுபிறபி எடுத்துவரும் யாக்கை !

முப்பதிலே உடலெழில்தான் குன்றும் – யாரும்
முடியாது புதுப்பிக்க என்றும் !
இப்படித்தான் வாழ்கிறது உலகம் – என்றும்
இதுதானே "வாழ்வியலின் புதினம் !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ இன்னல் தொடும் வாழ்வு !

நித்திரைப் பாயினில் கடன்காரன் தொல்லைகள்
நிம்மதி தன்னையே தொலைத்து விடும் !
புத்தரி மார்களோ பொருள், பணம், வீடெனப்
போரிடும் நிலையினால் எரிச்சல் வரும் !
செத்திட முன்னரென் மாமனார் சாட்டிய
சீதன வயல்நிலம் அடகில் விழும் !
உத்தமன் என்றபேர் ஓடிட, உலுத்தனாய்
ஊரவர் சொல்கையில் அழுகை மிகும் !

கற்றவன் தகுதியைக் காசினால் மதிப்பிடும்
காலத்தை நினைக்கையில் கவலை வரும் !
அற்ற குளத்தினில் அறுநீர்ப் பறவை போல்
அயலவர் மாறினார்; துயரம் தொடும் !
சுற்றமும் முன்னர் போல் சுக துக்கம் பேணிடார்
சுயநல வேட்கையைக் கண்டு விடும் –
இற்றரை வாழ்வியல் இதுவென எண்ணிட
இரத்தத்தில் மிகைப்பட அழுத்தம் வரும் !

பகலிரா வென்றுமே பட்டினி கிடந்திடில்
பருத்ததாம் தேகமும் இளைத்து விடும் !
முகத்திரை போட்டவர் முறுவலில் மயங்கினால்
முயற்சிகள் தோல்வியில் முடிந்து விடும் !
தகைமையில் இருந்தவர் தன்னிலை கெட்டிடின்
தாங்கொணாச் சோதனை தொடர்ந்து வரும் !
இகத்திலே பணமதே வாழ்க்கையென்றான பின்
இல்லையேல் பணமது 'இன்னல் தொடும் !'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ அழகில் மனம் தோயும்

"அன்புவழி புரம்" வாடகை இல்லம்
அடியேன் பெற்ற தவம் ! – என்
சிந்தனை யாவும் உருப்பெறும் பாடல்
செய்திடக் கிடைத்தவரம் !

மாலையில் மந்திகள் மதில்களில் ஏறி
மகிழ்வுடன் நடை பயிலும் ! – மரச்
"சோலையில் உள்ள மரங்களில் குந்தி
சுவைத்திடும் காய், பழங்கள்"

வாழைகள் செழித்து வளர்ந்திட அயலில்
வாய்த்த நல்நீரோடை ! – அதி
"காலையில் கதிரவன் கிரணங்கள் தழுவும்
கவின்மிகு பூஞ்சோலை !"

கோல வடிவினன் "முருகனை ஏற்றுக்
கொண்ட தோர் திருக்கோயில் !" – அயல்
"பாரச் சிலுவையை எற்ற இயேசு"வைப்
பரவிடும் அருட் கோயில் !

குன்றாக் கல்வி கொடுத்திடும் "கலைமகள்
கலைதரும் நற்கூடம் !" – பழம்
"வெந்நீர்க் கிணறுகள்" அமைந்துள்ள சாலையில்
வரிசையில் பல மாடம் !

"அயலின் இயற்கை செயற்கை அழகினில்
ஆம், மனம் நிதம் தோயும் !" – வாழ்வு
செயம் பெறும், "உதித்திடும் சிந்தனை தமிழில்
சீர்தரும் கவியாகும் !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ சங்கு ஒலிப்போம் !

திருமணத்தைத் தான் செய்து திருமதியை மகிழ்விக்கும்
திருவாளர் தமக்கு 'மதிப் பளிப்போம் !' – வாழ்வில்
இருமணத்தை தான்புரியும் ஈனர்களை இனங்கண்டு
இகம்விட்டு 'இல்லாது ஒழிப்போம் !'

சீதனத்தை வேண்டாத ஆடவரை 'ஆண்மை'யுள்ள,
'சிங்கங்கள்' என்றுநிதம் உரைப்போம் ! – கொழுத்த
சீதனத்தை எதிர்பார்க்கும் 'முதுகெலும்பு' இல்லாத
'சிறுநரிகள்' தனையுலகில் பழிப்போம் !

பிள்ளைபெறும் இயந்திரமாய் பெண்களையே நினைக்கின்ற
'பித்தர்களை' உலகிருந்து அழிப்போம் ! – காணும்
தொல்லையிலும் மகிழ்வாய் கை தொட்டவளைக் காப்பாற்றும்
தூயவர்க்கு கௌரவங்கள் அளிப்போம் !

காணிநிலம் காசு நகை கல்வீட்டை எதிர்நோக்கும்
'கஞ்சல்கட்கு' பெண்கொடுக்க மறுப்போம் ! – நாளும்
தானுழைத்து மனைவி, மக்கள் தனைக்காக்கும் காளையர்தம்
'தனித்துவத்தை' உலகறிய உரைப்போம் !

'பாரதியின் சிந்தனைகள்' பாவையர்கள் ஏற்கின்ற
பாங்கான திட்டங்கள் வகுப்போம் ! – இந்தப்
பாரினையே புரட்டுகின்ற 'பகுத்தறிவுப் பாசறை'யில்
படைநடத்தச் 'சங்கெடுத்து ஒலிப்போம் !'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதி

அறுபது அகவை சிகையினில் வெண்மை
அதுதான் முதுமை அடையாளம் ! – என்
திருமதி யுடனே மழலைகள் நல்கும்
தொல்லைகள் நாளும் தாராளம் !

இளமைக் காலம் ஆடிய ஆட்டம்
இப்போ நினைவில் வருகிறது ! – தினம்
வழமை யாகக் கூடிய கூட்டம்
வாய்மொழி இன்னல் தருகிறது !

அடிக்கடி நோய்கள் வந்தே எனக்கு
அல்லல் தந்து வதைக்கிறது ! – நோய்
படிப்படி யாகக் கூடிட "இறுதிப்
பயணம்" என ஊர் கதைக்கிறது !

வாலிப வயதில் வனிதையர் எந்தன்
வலையில் வீழ்ந்ததன் பெறுபேறு ! – உடல்
நூலென இழைத்து வாழ்ந்திடும் நிலையில்
நண்பர்கள் கூட எதிர்மாறு !

பேரப் பிள்ளைகள் சீண்டிப் பார்த்து
பெருமிதம் காணும் வயசாச்சு ! – கடைசி
நேரம் வரைக்கும் காத்துக் கிடப்பது,
நிலத்தில் பிறந்தவர் "விதி" யாச்சு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் என்றோ?

மலத்திடை பன்றி போலும்
 மனிதனும் குணத்தில் கீழாய்
விலங்கொப்ப வாழும் இந்த
 "விதியென்று மாறக் கூடும்?"

பிறப்பினால் "பகுத்து ஆயும்
 பேறினைப்" பெற்ற மாந்தர்
சிறப்புகள் தொலைத்து நிற்கும்
 சீரழிவு என்று மாறும்?

கட்டிய மனைவி இல்லில்
 கலங்கிடும் நிலையைத் தோற்றி
"ஹொட்டலில்" கொழுநன் தங்கும்
 கொடுமைகள் என்று ஓடும்?

பிள்ளைகள் பாதை ஓரம்
 பிச்சைக்காய் அலையும் நேரம்
பிள்ளைகள் ஈன்ற பெற்றோர்
 பிரச்சினை "மன்றில்" ஏறும் !

"வட்டியால் சுரண்டி" ஊரை
 வாழ்ந்திடும் செல்வச் சீமான்,
பட்டினி இதுதா னென்று
 பகரவொரு நாள் வராதா?

பொதுப்பணம் தனையே, "பெற்ற –
 புதையலாய்" எண்ணு கின்ற
சதத்திற்கும் மதிப்பில் லாதோர்
 சாகுமொரு "திருநாள் என்றோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ தமிழ் மறவேன் !

நெருக்கடி கூடி நிம்மதி தொலைந்து
நிலமிசை வாழ்கையிலும் – சோற்றுப்
பருக்கையு மற்றுப் பரிதவித் துடலம்
பட்டினி காண்கையிலும்
சிரிப்பினை இழந்து சித்தமும் குழம்பி
சிக்கல்கள் சேர்கையிலும் – முல்லை
விரிப்பினை யொத்த முறுவலைச் சிந்தும்
வித்தகி தமிழ் மறவேன் !

கற்பனைக் கோட்டை கட்டியே அவளைக்
கவிதைகள் உருப்போடும்! – எழிற்
பொற்கொடி யவளின் தழுவலில் இன்பம்
புனலாய் வழிந்தோடும் !
பற்பல புலவோர் பாடிய பனுவல்
பைங்கிளி எழில்வார்க்கும் ! – நான்
இற்றரை வாழ்வில் இனியவ ளெந்தன்
இன்றமிழ் தனை மறவேன் !

நினைவினில் அவளின் நிலவொளி வதனம்
நித்தமும் நிழலாடும் ! – வரும்
கனவினில் கூட காரிகை யவளின்
கவினுடல் அசைந்தாடும் !
மனதினில் என்றும் மணித்தமிழ் மாதின்
மையலே உறவாடும் ! – இருள்
வனத்திடை தனியே வாழ்ந்திடும் போதும்
வண்டமிழ் உனை மறவேன் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ சிரித்தம் தெளி

காசிருந் தென்ன தம்பி
கனகடை இருந்து மென்ன?
மாசிலா மங்கை கூட,
மனைவியாய் வாய்த்து மென்ன?
வீசிடும் ஊரார் வார்த்தை –
வீச்சினை ஏது செய்வாய்?

சாகரம் போலே குன்றாச்
சம்பத்து உனக்கிருந்தும்,
சேகரம் என்னும் நாமம்
செகத்தில்நீ பெற்றிருந்தும் –
சோகம் நீ கொள்வதென்ன?
சொல்லடா மகனே, சொல்லு !

காசினைத் தான் மதித்தாய்
கடவுளைத் துதிக்கா நின்று
பேசினாய் பெரியவன் போல்
பிரபஞ்சம் உனதாய் எண்ணி
வீசினாய் ஏதோ வார்த்தை
வில்லங்கம் தேடிக் கொண்டாய் !

இன்று நீ செல்லாக் காசு
இதை நீயும் மறந்திடாதே !
என்றும் நீ சமூகத்தோர் முன் –
எரித்திடும் கழிவுக் குப்பை !
ஒன்றையான் சொல்வேன் சித்தம்
உணர்ந்து நீ தெளிவாய் பித்தம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ வாழ்ந்திட வாழ்த்துகின்றேன் !

காத்திர மாக நானும்
    கல்வியில் தேர்ச்சி காணப்
பாத்திர மாகி நின்று
    பணிபல செய்து என்னை
நேர்த்தியாய் வளர்த்த நல்ல
    நெஞ்சினர் என்று சொல்லும்
"வாத்திமார்" அனைவருந் தான்
    வாழ்ந்திட ஆசி தந்தேன் !

குறைகளைச் சிந்தை தன்னில்
    கொண்டிடா வகையில் மேலாம்
நிறைவுறும் அன்பி னோடு
    நித்தமும் அருகி ருந்து
அறுசுவை அடிகில் தன்னை
    அன்னைதான் ஊட்டல் போலும்
பொறுமையாய் "பாடம் தன்னைப்
    புகட்டிய மேலோர் வாழ்க !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியில் முதன்மை சித்தி
பற்றிடும் சீடன் என்றென் –
உள்ளத்தில் மகிழ்வு தேக்கி
உணர்விலே முறுக்கு ஏற்றி
கள்ளமில் அன்பி போடு
கருணையாம் கல்வி தந்த
வல்லவர் அனைவ ருந்தான்
வாழ்ந்திட வாழ்த்து கின்றேன் !

விருதுகள், போர்வை, மாலை
விலையிலாச் சான்று பெற்று
பெருமையை மண்ணில் நானும்
பெற்றிட வாழ்த்தும் வண்ணம்
உருப்பட வைத்த நல்ல
உத்தமர் வையம் தன்னில்
திருவுடன் நீடு வாழத் –
தெய்வத்தை இறைஞ்சுகின்றேன் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ அன்பால் புவியை ஆளப்பார் !

மனிதா நீயும் மற்ற வர்கள்
மதிக்கும் செயல்கள் பின்பற்று
புனித னென்றே வாழப் பார்,
புவியை அன்பால் ஆளப்பார் !

போட்டி, பூசல், பொறாமை களைப்
புந்தியில் இருந்து ஓட்டப்பார்
மாட்சிமை மிக்க மனித னெனும்
மதிப்பை உலகில் நாட்டப்பார் !

அம்பு போலும் அயலோர் தம்
அகத்தை துளைக்க முனையாதே !
செம்மை வழியில் செல்லப் பார்,
சினத்தை நீயும் வெல்லப்பார் !

குட்டி போடும் பண மென்று
கொல்லும் தீய ஆசை விடு !
வட்டி வாங்க விரும்பாதே
வறுமை கண்டும் கலங்காதே !

அன்னை, தந்தை துதிக்கின்ற
அறிஞர் தன்னை மதிக்கின்ற –
தன்மை கொண்டு நடக்கப் பார்
தலைக் கனத்தை விரட்டப்பார் !

கன்னிப் பெண்கள் கற்பினை நீ
களங்கம் செய்ய நினையாதே !
மண்ணில் உந்தன் மனைவிதனை
மறந்தும் திட்ட முனையாதே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ எல்லோரும் பங்காளர்

பள்ளியெனும் கூட மதில்
 பணியாற்றும் ஆசான்கள்
உள்ளந் தனில் அதிபர்
 உயர்ந்த இடம் பெற வேண்டும் !

கூட்டுக் குடும்பம் போல்
 குறைநிறைகள் வருகையிலும்
ஏற்றதனைச் சீர் செய்வோர்
 எவர் மதிப்பும் பெற்றிடுவார் !

முட்டையிலே மயிர் பிடுங்கும்
 முனைப்போடு அனுதினமும்
முட்டும் நிலை வந்தாலோ
 முன்னேற்றம் முயற் கொம்பாம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரவர் பள்ளி தன்னை
அலங்கரிக்கும் முதல்வ ரெனில்
அதிபருக் கொத்தாசை யெலாம்
அளிப்பவர் நல்லாசிரியர் !

போட்டி, விழாக்கள் முதல்
பொருட்காட்சி விளையாட்டால்
ஈட்டுகின்ற சாதனையில்
எல்லோரும் பங்காளர்

அதிபரவர் தலை கனத்தால்
ஆம், ஒழுங்கு நிலை குலையும்
புதிர்க் கணக்காய் நிர்வாகம்
புரியாத வகை செல்லும் !

ஆதலினால் அனை வரையும்
ஆற்றுப் படுத்த வல்ல
சாதனையில் தடம் பதித்தார்
சரித்திரத்தில் இடம்பிடிப்பார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ என்ன இலாபம்?

கிரணங்கள் தனைப்பரப்பும் கதிரோன் என்றும்
கிழக்கினிலே உதிப்பதிலே மாற்ற மில்லை !
இரவினிலே வருகைதரும் அம்புலி தன்
இயல்பினிலே ஒருபோதும் மாற்ற மல்லை !
சுரந்தளிக்கும் முலைகளதோ வழங்கும் பாலை
சொல்லிடலாம் மீண்டுமவை ஏற்பதில்லை !
நிரந்தர மில்லாததெனும் வாழ்வை யேற்று
நிலம்வாழும் மனிதர்களில் உண்டே மாற்றம் !

காட்டிலுறை பறவையினம், அவைகள் போலும்;
கணக்கற்ற விலங்கனைத்தும் கவலை யற்று,
ஓட்டிடுதே வாழ்நாளை அவைகள் வாழ்வில்
ஒற்றுமைக்கு எந்நாளும் பஞ்சமில்லை !
மாட்டினிலும் கீழாக மதிதான் கெட்டு
மாந்தர்களோ வாழ்கின்ற நிலைமை, நெஞ்சில்
மூட்டிடுதே துயரத்தைச் சோகந் தன்னை
முடிவுபெறச் செய்வதற்கு என்ன மார்க்கம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மைநிறம் குருதியென்று செப்பி வைத்தார்
செகம்வாழ்வோர் சமனென்று ஒப்பி வைத்தார் !
இம்மையிலே ஒருவாழ்வு உண்டே யென்றார்
இறையுலகு மறுமையென இயம்பு கின்றார் !
அம்மம்மா !... இனத்தோடு, மதத்தைக் கூட்டி
அவர்தானே சாயங்கள் பூசு கின்றார் !
செம்மைவழி வாழ்ந்திடுநல் நோக்கு மின்றி
சீரழிவை நாடுகின்றார்; வெட்கக் கேடு !

ஆறறிவு பெற்றிருந்தும் அலகை போலும்
ஆமிவர்கள் வாழுகிறார்; மனித ரானோம்
பேறிதுதான் என்பதனை எண்ணி டாமல்
பிரிவினைக்கும், பிரச்சினைக்கும் நண்ணுகின்றார் !
கூரியநல் ஆயுதத்தால் நெஞ்சம் தன்னைக்
கூறாக்கும் வார்த்தைகளால் குத்து கின்றார் !
பாரிலிவர் செய்கைகளைப் பகர்தல் எங்கன்;
"பகுத்தறிவு பெற்றிருந்தும் என்ன இலாபம்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ கவிதை நெஞ்சம்

புலரும் புலரி ஒளிக்கீற்று
    புல்லும் நெல்லும் வளர்நாற்று !
மலரும் மலர்கள் எழில் வண்ணம்
    மனதை ஈர்க்கும் முகில் வன்னம் !
நிலவின் குளிர்மை சுகம் துய்க்க
    நெஞ்சில் நினைவு தினம் மொய்க்க !
பலவாம் புட்கள் இசை கேட்க
    பாவலன் நெஞ்சம் களிக்கிறது !

வளைந்து நெளியும் நீர் ஓடை
    வனப்பாம் இயற்கை பசும் போர்வை !
நுழையும் மலரில் தேன் வண்டு,
    நுட்பம் தனையும் கண்கண்டு
இளமை நினைவைக் கிளறிவிடும்
    இதயம் வானைத் தொட்டுவரும் !
உலகில் காணும் புதுமைகளால்
    உள்ளம் மகிழ்வில் குளிக்கிறது !

சாலை தனிலே சன நெரிசல்
    சந்தோஷிக்கும் உடல் உரசல் !
நூலைச் சுமக்கும் மாணவர்கள்,
    நுவலும் கல்விக் கானவர்கள் !
வேலைக்(கு) ஓடும் உழைப்பாளர்,
    வீதியில் இரக்கும் பிழைப்பாளர்
காலை, மதியம், மாலை வரை
    காண்பவை, நெஞ்சில் கனக்கிறது !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ வயது செய்யும் கோளாறா?

பிரிய முடனே பெற்று வளர்த்து
பிறங்கும் கல்வி தனையூட்டி
அரிய முறையில் பேணி நடந்தும்
அவர்கள் போக்கில் மாற்றங்கள்
வருவது ஏனோ; வையகம் மீதில்,
"வயது செய்யும் கோளாறா?"

பிரியப் பட்ட உணவு வகைகள்,
புனையும் ஆடை, துணி மணிகள் !
தெரிவுசெய்து அவர்கள் தேவை
தீர்த்து வைக்கும் பெற்றோரை
உரிமையில்லை என்றே விலக்கும்
உண்மை, உலக நடைமுறையா?"

"பருவ மெய்தி விட்டால், தங்கள்
பாசத்தாயை, தந்தை தனைப்
பொருட்டாய் மதிக்க மறந்து போகும்
புன்மை நிலையும் வாழ்வியலா?"
வருத்தம் காண வைத்தே அவர்கள்
வாழும்நிலை யவர் தலைவிதியா?

"பாங்கி மார்கள் உரையைத் தாமும்
படிக்கும் வேதம்" எனவெண்ணி,
தாங்காத் துயரம் தாங்கி வாழ்ந்து
தளர்ந்து போன பெற்றோரை
ஏங்க வைக்கும் பிள்ளைகள் செய்கை
"இதயந் துளைக்கும் கூர்வேலா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ வானம் தொடும்

தண்டமிழ்க் கவிஞன், கண்ண
தாசனைப் போலென் போக்கு !
உண்மையை உயிர்போ னாலும்
உரைப்பது எந்தன் நோக்கு !

திண்ணிய இலட்சி யத்தை
திசையெட்டும் கூறும் பாட்டு !
கண்ணியம் மறந்த பேர்க்கு
கவிஞனென் பாட்டு, வேட்டு !

மாதரை அடக்கி வாழும்
மாந்தரைத் தீண்டும் சர்ப்பம் !
தீதுகள் புரிவா ரோடு
தினந்தினம் செய்யும் தர்க்கம் !

அடிமைகள் இல்லா வையம்
அமைத்திட, உணர்வையூட்டும் !
நடிகர்கள் முகத்தி ரைகள்
நடுத்தெரு கிழித்துக் காட்டும் !

வேலிகள் பயிரை மேயும்
வேலையை வெளிச்சம் போடும் !
கூலிகள் கண்ணீர் விட்டால்
குரல்வளை நெரிக்க ஓடும் !

கதிரைக்குச் சமர்செய் கின்ற
கஞ்சல்கள் பக்கம் விட்டு,
"புதியதோர் உலகம் தன்னைப்
புதுக்குமே வானம் தொட்டு!..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ உயர்ந்த பூசை!

பசியோடு தாகமிலா இறைவனுக்குப்
படைக்கின்றீர்; பலஅடிசில் பட்சணங்கள் !
நிசியினிலும் அன்னவனை நினைக்கின்றீர்கள் !
நித்திரையில் வரும்கனவில் காணுகின்றீர் !

தூணினிலும் துரும்பினிலும் இருப்போனுக்குத்
தொகைதொகையாய் பணம்போக்கி ஆலயங்கள்
கோபுரங்கள் எல்லாமே கட்டுகின்றீர் !
குறைவின்றிக் காசுபணம் கொட்டுகின்றீர் !

ஆண்டுக்கு ஒருமுறையும் ஆலயத்தை
அழகுசெயும் நோக்கோடு அலங்கரிக்க
வேண்டுமென்று வர்ணங்கள் தீட்டுகின்றீர் !
வெகுசெலவில் மின்விளக்குப் பூட்டுகின்றீர் !

பூ மாலை கட்டிவந்தே போடுகின்றீர் !
புதுமலர்கள் சிரசினிலே சூடுகின்றீர் !
பாமாலை பாடுகின்றீர், ஆடுகின்றீர் !
பக்தியுடன் நேர்கடன்கள் ஆற்றுகின்றீர் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம்பாளம், விளக்குவகை, தட்டம், செம்பு,
    தங்கநகை அணிபலவும் அன்பளிப்பீர் !
பேப்பரிலே பெயர்விளங்க திருவிழாக்கள்
    பெரிதாக நடத்திடுவீர்; தானம் செய்வீர் !

வெள்ளி செவ்வாய் விரதமெனப் புலாலை விட்டு,
    விடிந்துபகல் சாயும்மட்டும் தவமிருப்பீர் !
வெள்ளிக்கு மறுநாளாம் சனியே வந்தால்,
    வீட்டினிலே மச்சமின்றி உண்ணமாட்டீர் !

ஆண்டாண்டு வருகின்ற திருவிழாக்கள்
    அரிய திரு நாட்களிலே "ஆத்மசாந்தி" –
வேண்டிநிதம் அளித்திடுவீர் மாண்டோர் பேரால் !
    விளக்கட்டும் ஒலிபெருக்கி பெயரை என்பீர் !

உருப்பெற்று உணவற்று, உடையுமற்று
    உறவினர்கள் துணையற்று, உரிமையற்று –
நிர்க்கதியாய் வாழ்பவரை உபசரித்தால்
    நிமலனுக்கு நீர் செய்யும் "உயர்ந்த பூசை" !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ வேறென்ன கண்டான்?

"குரங்கி லிருந்து பிறந்தவன் மனிதன்"
குரங்கினை விடவும் மோசமென் றாகி,
மரங்கள் தாவும் மந்திகள் போலும்,
மனிதனும் பலவாம் கட்சிகள் தாவி,
நிரந்தர மிந்த நிலமிசை வாழ்வென –
நினைத்தே பற்பல நிகழ்வுகள் கண்டான் !

நலங்களை ஓம்பும் நாட்டம் மறந்து
நன்மைகள் புரியும் எண்ணம் விடுத்து,
விலங்குகள் ஒப்ப; விட்டிலாய் வீழ்ந்து,
விரைவில் வாழ்வினை முடித்திடு கின்றான் !
கலங்கரை விளக்கென ஒருசிலர் வாழ்தல்
கண்டிருந்தும் இவன், கயமையே கண்டான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசு, பணம் பொருள் க(கொ)ண்டிடும் ஆசை
கனலும் தீயாய் நெஞ்சினில் பற்ற
நேசம், தயவு, நேர்மையைத் தொலைத்தே
நேரமெலாம் பொன், பொருளெனும் நினைப்பில்
வாசம் செய்தான்; வாய்மை துறந்தான்,
வையக வாழ்விலே வெற்றியா கண்டான்?

பத்தினி வீட்டினில் பணிசெய்து களைக்க
பணத்தினை ஈய்ந்து பரத்தையைக் கலந்து
மொத்தத்தில் கௌரவம் முழுவதும் தொலைத்து,
முடிவிலா நோயினை உடலினில் ஏற்றும்
உத்தமன் உலகினில் தானெனும் வார்த்தை
உதிர்ப்பதைத் தவிர, வேறென்ன கண்டான்?

இப்படி வாழ்தலே இலட்சிய மென்னும்
'இனிய கொள்கை' இல்லா தவனாய்,
"குப்பைகள் கிளறும் கோழிகள்" போலும்
குறிக்கோள் விட்டுக் குப்பையென் றாகி
ஒப்பனை உலகில் வாழ்ந்திடு கின்றான்;
"ஒப்பாரி முடிவில் வேறென்ன கண்டான்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம் வாழ்த்தும்!

கண்ணியமாய் நீ வாழு கபடி போலும்
　　காலத்தை ஓட்டாதே! அயலார் தம்மை
உண்மையுடன் நேசிக்கக் கற்றுக்கொள்ளு
　　உதவாத கொள்கைகளை உதறித்தள்ளு !
திண்ணிய நல் இலட்சியத்தை ஏற்றுநில்லு
　　தீமைகளைக் களைந்தோட்டும் செயலால் வெல்லு !
பண்பான சமூகத்தைப் படைக்கும் வண்ணம்
　　பணிசெய்தால் பாருன்னை நினைத்தல் திண்ணம் !

சாதியெனும் கொடுந்தீயை அணைக்கப்பாரு
　　சமத்துவத்துத் தத்துவங்கள் எடுத்துக்கூறு !
நீதியதன் பாதையிலே பயணம் செல்லு
　　நீசர்களை அவர்கொட்டம் தனைநீ கொல்லு !
சோதியினை உலகுக்குப் படைத்துக்காட்ட
　　சுற்றமென மாந்தரெல்லாம் மாலைசூட்ட
சாதனைகள் தோற்றிடுவாய்! உந்தன் பாதை
　　சரித்திரமாய் ஆகிவிடும் வெல்வாய்பூவை !

ஏமாற்றும் உலகத்தை மாற்றப்பாடு
　　ஏற்றமுறு வாழ்வுக்கு வழிகள் தேடு !
நாகாத்து நீ வாழ்ந்தால் நன்மைகூடும்
　　நாட்டினிலுன் புகழ்வாழும் புன்மை ஓடும் !
போகாதே தீமைக்கு எதிராய் நில்லு
　　போதனையை நேராக்கி செயலால்வெல்லு !
வாகான திட்டங்கள் வகுத்தால் உன்னை
　　வரலாறு ஏற்குமடா; உலகம் வாழ்த்தும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ பெறுபேறு

காடழித்து மேடொழித்து
    கடின உழைப் பால் ஒடிந்து
கோடைவயல் தனைச் செய்யும்
    குறிக்கோளை மனத்தி ருத்தி
"வாடை, குளிர் பனி" தாங்கி
    வயற்குடிலில் வசதி யற்று
ஈடிணையே இலா வகையில்
    "இராக்காவல்" தான் புரிந்தேன் !

"காட்டுப் பன்றி" யுடன்
    "கரிக்கூட்டம்" வரா வகையில்,
"தோட்டா", சுடு கலனைத்
    தொடா வண்ணம் "சீனவெடி"
துணை கொண்டு தனிய னெனத்
    துணைக் கெவரும் இல்லாமல்
எனைக்கண்டு பலர் வியக்க
    இரவிரவாய் கண்வி ழித்தேன் !

பட்டப்பகல் "குருவி, கிளி"
    பசுந்தோகை "மயில்" வரவும்,
இட்டபடி குழல் ஊதி
    இவையெல்லாம் விரட்டி விட்டு
நட்டம் – நயம் காண
    நாளெண்ணிக் காத்தி ருக்க
முற்றிவிளை நெற் கதிர்கள்
    முகம்காட்டிச் சிரித்த தடா !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குஞ்சுத் தம்பி" யுடன்
    கூடவுள்ள "கமல்" தானும்;
நெஞ்சறிய இன்னல் தனை
    நிலையாகத் தந்தாலும்
அஞ்சுகம் போல் அழகுடைய
    அத்தைமகள் "ராகினி"யும்;
கஞ்சத் தனம் இல்லாத
    "கலைமணி"யும் துணை நின்றார் !

இந்தவிதம் காவலுக் கென்
    இல்லாளும் ஒத்தாசை
தந்ததனால் ஒரு விதமாய்
    தடைகளினைத் தான் தாண்டி
அந்தோ, அறுவ டையை
    ஆம், செய்த பெறுபேறாய்
வந்ததுவே என் கரத்தில்
    வளம் சேர்க்கப் பல இலட்சம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ வாழ்வதா, சாவதா?

கைப்பி டித்தவள் பாதை மாறினாள்
காலம் செய்த கோலமோ? – அவள்
"ஒப்ப னைக்கென வாழ்ந்த பேதையோ?"
உண்மை இராமனின் சீதையோ?"

மழலை நால்வரைப் பெற்ற பின்னரும்
மனதில் விழுந்தது என்னவோ? – என்
அழுகை காணவே ஆசை வந்ததோ
"அறுந்து போனது பந்தமோ?"

"கையில் என்னிடம் காசிருக்கையில்
கணவன் கண்ணென எண்ணினாள் !" – தினம்
மெய்யில் நோயுமே மொய்த்த போதிலே
மெல்ல விடைபெற உன்னினாள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி மன்றிலே ஏற்றி யென்னையே
நிலை குலைத்திட நினைக்கிறாள் ! – தன்
"சாதி சனங்களைச் சார்ந்தி ருந்துமே
சந்ததம்துயர் விதைக்கிறாள் !"

"அண்ணன் தம்பியே உலகம் என்கிறாள்
அக்கா மேலெனச் சொல்கிறாள் ! – வெடி
குண்டு போலவே உள்ளம் கூறிடக்
குதறி நாளுமே கொல்கிறாள் !

பிரிய மானஎன் பிள்ளை நான்கையும்
பிரித்து வைத்திடப் பார்க்கிறாள் ! – தன்
புருஷன் என்பதை மறந்து, வெளியில்நீ
போக வில்லையா? கேட்கிறாள் !"

ஒட்டி இவளுடன் உலகம் மீதினில்
உயிருக் குயிரென வாழ்வதா? – "உறவை
வெட்டி விட்டுமே விலகி விடுவதா?
வீழ்வதா, இல்லைச் சாவதா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ மந்திகளின் அரசாங்கம்

மரஞ்செறிந்த என் வளவில்
    மந்திகளின் அரசாங்கம்
துரத்த முடியாத வொரு
    துயரந்தான்: பகல் வேளை
மரங்களிலே கிளை யனைத்தும்
    மந்திகளே வீற்றி ருக்கும் !
வரம்பெற்ற பிடி தளர்ந்து
    வானரங்கள் வீழாதாம் !

கடித்ததெல்லாம் கரும்பாக
    கடவுளிடம் தினம் வேண்டி,
பிடித்த தெல்லாம் இரும்பாக
    பெற்றனவாம் நல்ல வரம் !
மழை, காற்று குளிர் எதுவும்
    மந்திகளை அசைக்காது
இலை, பிஞ்சு காய் அனைத்தும்
    இவைகளுக்குக் கசக்காது !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையெடுக்கும் குரங்குகளோ
பல நூறாம் செய் புரளி
விடை காண இயலாத
வில்லங்கம், துயர் நல்கும் !
தடை, காவல் அரண் களையும்
தகர்த்து வரும் கூட்டத்தை
இடைமறிக்கும் நாய்களையும்
இவை கடித்துக் குதற வரும் !

சுண்டு வில்லைக் கரத் தெடுத்து
சுள்ளெனவே அடித்தாலும்
கண்டுகொள்ள மாட்டா வாம் !
கதிர் சாயும் வரை யிலுமே,
உண்டு கடித்து எல்லாம்
உதவாமல் செய்து விட்டுச்
சென்றாலும் செக்கல்பட,
சரியாகக் காலை வரும் !

சீனத்தார் செய்த ளித்த
சீனவெடிச் சத்தத்தால்
வானரங்கள் ஓடி விடும் !
வந்து பின்னர் வாடி விடும்
கானகத்து விலங்கு களுள்
காதகர்கள் செயல் புரியும்
வானரங்கள் மிக உச்சம்
வளவுகளில் எது மிச்சம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ ஆனந்தம் அளித்தாலென்ன?

இந்துமா ஆழிமகள் திலக மென்ன
இலங்கு கின்ற இலங்கையெனும் அழகுத் தீவில்
வந்தேறு குடிகளெனும் வார்த்தை யாலே
வந்ததுவோ துயரங்கள்; வர்க்க பேதம்?
சந்ததமும் சாதி, மதம் மொழிக ளென்று
சாற்றியதால் நட்புணர்வு குறைந்த தாமோ?
'சிந்தித்தே மூவினமும் மகிழ்வு துய்க்கும்
செய்தியினைச் சித்திரைநீ, தந்தா லென்ன?'

எல்லோரும் இந்நாட்டு மன்ன ரென்னும்
எண்ணங்கள் இதயத்தில் பூக்கும் வண்ணம்
நல்லபுதுச் சிந்தனைகள் உதிக்க, மாந்தர்
நனிசிறந்த வாழ்வடையும் வழிகள் செய்ய
இல்லாதார் உள்ளவர்கள் என்ற பேச்சு
இல்லாத ஒரு நிலையைத் தோற்று வித்து
'சில்வாவும், சுலைமானும், சில்வெஸ்ரரும்
சிவாவுடன் கைகுலுக்கச் செய்தாலென்ன?'

இல்லையினி எம் நாட்டில் சண்டை யென்று
இசைக்கின்ற வார்த்தைகளைச் செவிகள் கேட்க,
'கல்முனை' 'கொழும்பு' முதல் 'காலி' தொட்டுக் –
'கதிர்காமம்' 'கண்டி' 'திரு மலை' வரைக்கும்
செல்லுகின்ற நிலைவரவும் வேண்டும் ! அச்சம்
சேராமல் பயணங்கள் தொடர, மாந்தர்,
'அல்லலுக்கு விடைதந்து ஆனந் தத்தை –
அனைவருக்கும் சித்திரைநீ, அளித்தா லென்ன?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ காசினைப் போற்றும் காசினி

காதில் உறைத்திட மாமி உரைத்தவோர்
கதையைக் கேட்கின்றேன் – அப்
போதில் பதவியில் இருந்த வேளையின்
பொழுதைப் பார்க்கின்றேன் !

சவுதிப் பூமியில் மகனிருந் தனுப்பிய
'செக்கை'ப் பார்க்கின்றாள் ! – முன்
அவதிப் பட்டெனை மருமகன் ஆக்கிய
அந்நிலை காண்கின்றேன் !

சொத்தும் பத்தும் சுகமும் பணமும்
சொந்தம் சேர்த்துவரும் ! – நிதி
அற்றுப் போகும் நிலைமை வந்தால்
அனைத்தும் தொலைந்துவிடும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் வாழ்வு – இதுதான் உறவு
    இப்பொழு தறிகின்றேன் ! – பணம்
அதுதா னில்லா ஒருநிலை வந்தால்
    அந்நிலை தெரிகின்றேன் !

ஆசை யுடனே பலரும் என்றனை
    அழைத்தார் முறைசொல்லி – நான்
காசில் லாத ஒருவனென் றானேன்
    கதைத்தார் குறைசொல்லி !

வையகம் மீதினில் வாழ்ந்திடு வரையும்
    வாழ்வில் பணம் தேவை ! – நீ
பொய்ய னென்றாலும் புகழும் உலகம்
    போற்றும் மாலையிடும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ கவிஞன் யான் என்னபாட...

காசுக்காய் மேடை ஏறி
காசுக்காய் கவிதை பாடி
காசுக்காய் பேச்சுப் பேசி
காசுக்காய் கொள்கை விட்டு
காசுக்காய் மானம் விற்று
காசுக்காய் உறவை விட்டே,
காசுக்காய் அலைவோர் பற்றி
"கவிஞன் யான் என்ன பாட !...

காசுக்காய் ஊரை விற்று
காசுக்காய் மனையை விட்டு,
காசுக்காய் நேர்மை யற்று,
காசுக்காய் உணர்வை விட்டு
காசுக்காய் பண்பை விற்று
காசுக்காய் அன்பை விட்டுக்
காசுக்காய் அலைவோர் பற்றி
"கவிஞன் யான் என்ன பாட !...

காசுக்காய் சமயம் விட்டு
காசுக்காய் நேசம் கெட்டு
காசுக்காய் மொழியை விற்று
காசுக்காய் கட்சி மாறி
காசுக்காய் எல்லாம் விட்டு
காசுக்காய் வாழ்ந்து கெட்டு(ம்)
காசுக்காய் அலைவோர் பற்றி
"கவிஞன் யான் என்ன பாட !...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ சாதனை படைத்து வெல்வோம்

இந்துமா சமுத்திரப் பெண்
    எழில்நுதல் திலகம் போலும்
முந்துபேர் இலங்கைத் தீவில்
    மூவின மக்கள் தாமும்
சொந்தமாய் மகிழ்வு தேங்க
    சுபிட்சமாய் வாழும் பாங்கு
வந்தது வசந்த மெம்மை
    வரித்தது சிரித்து நின்றோம் !

ஒற்றுமை யென்னும் அந்த
    உயரிய தத்துவத்தை
கற்களாய்க் கொண்டு அன்புக்
    கட்டடம் ஒன்று செய்து
பற்றுடன் பாரின் மீது
    பாசத்தில் பரிவில் ஓர்தாய்
பெற்றதாம் புதல்வரென்னப்
    பிறங்குமோர் வாழ்வமைப்போம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசிசம் என்ற பேயை
 பாழ் செய்யும் முனைப்பினோடு
மாசிலா மனத்த ரென்னும்
 மகுடத்தில் உறவு பேணும்
தேசிய ஒருமைப் பாட்டுத்
 தேர்வினில் சித்தி பெற்று
காசினி விடிவைக் காண
 கைகளைக் கோர்த்துச் செல்வோம் !

மதத்தினால் மதத்தின் பேரால்
 மனிதர்கள் சண்டை யிட்டு
நிதந்நிதம் இன்னல் காணும்
 நிம்மதி தொலைத்த வாழ்வு
எதிரிலே இல்லா தோட
 எல்லோரும் களியைச் சூட
புதுமையால் செழிக்கத் தேசம்
 புந்தியில் நிறைவு காண்போம்

இனியநல் வாழ்க்கைக் காவில்
 இனம் மொழிச் சாயம் போக்கி
முனிவுகள் கொள்ளா வண்ணம்
 முறுவல்செய் முகங்க ளோடு –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியிடம் பள்ளி கோயில்
 பன்சல சேர்ச்சி யெல்லாம்
அணியென ஒன்று கூடி
 அன்பெனும் பயிர் வளர்ப்போம் !

சந்திரா அக்கா என்றால்
 சசிகலா 'நங்கி' யென்போம்
சுந்தரம் காக்கா என்றால்
 சுலைமானைத் தம்பி யென்போம்
கந்தனை மாமா வென்றால்
 கலிஸ்ரனை மச்சா னென்போம்
சொந்தமாய்ச் சில்வா வோடு
 சூழ்ந்தயல் சேர்ந்தி ருப்போம் !

போதனைச் செம்மல் புத்தர்
 பொறுமைக்கோர் அண்ணல் காந்தி
மாநபி நாதர் வாழ்வில்
 மாநிலம் மகிமை காண
ஆவன செய்து உயர்ந்தார்
 ஆமவர் பாதை பற்றிப் –
பூதலம் மீதில் நாமும்
 சாதனை படைத்து வெல்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ மனவருத்தம்

கனிவுடன் கலந்து பேசும்
    கண்ணியம் மிக்க நண்பன்
இனிய "இரா. இரத்தினா" தான்
    இயற்றிய கவிதை நூலை,
வெளியிட இருப்ப தான
    விளம்பரம் பார்த்த காலை
களிப்படைந் திட்டேன்! ஆனால்
    கவலையும் கவிந்து கொள்ளும் !

வேலையின் நிமித்தம் அன்னோன்
    வேல்விழி "சுசீலா" வோடு,
"ஆலையூர்" வந்த போதில்
    ஆசையாய் அரவணைத்தோம் !
படையினர் எம்மைப் பாடு
    படுத்திய காலகட்டம்,
அடைந்ததாம் துயரில் நாமும்
    அவனுடன் பங்கு கொண்டோம் !

பலருமே வியக்கும் வண்ணம்
    பள்ளியை இணைத்து மேலாம்,
'கலைவிழா' நடத்தி வந்தோம்;
    "கவியரங்கு" யாவும் செய்தோம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையிலே இடமாற் றத்தால்
இனியவன் "சேனையூர்"க்கு
விடைபெற்றுச் செல்லும் வேளை
விழிநீரால் விடை கொடுத்தோம் !

விலையிலா அழகு, ஆற்றல்
விளங்கிட வாழ்வில் மூன்று
மழலைகள் கண்ட அன்பன்
மாற்றலாய் போன பின்னர்,
தொலைவிலே இருந்த போதும்
தொலைந்திடா வகையில் நாளும்,
தொலைபேசி, மடல்களோடு
தொடர்ந்தது எமது நட்பு !

"பொன்னாவரை" என்னும் நல்ல
புகழ்மிகு கவித்தொ குப்பை
பண்ணிய செய்தி தன்னை
பத்திரிகை தனில்ப டித்தேன் !
என்றனின் விலாசத் துக்கு
ஏனொரு அழைப்பைத் தானும்,
அன்னவன் அனுப்ப வில்லை,
அதுபெரும் "மனவருத்தம் !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ நூறாண்டு காலம் வாழ்வான்!

தாயெனப் பரிவு காட்டும்
    தையலாள் துணையாய் வாய்த்தால்
நோய்நொடி இன்றி ஆளன்
    "நூறாண்டு காலம் வாழ்வான் !"

"மந்திரி போலும் நல்ல
    மதியூகம் உள்ளாள்" வந்தால்
சந்தோசம் குன்றா வண்ணம்
    சகத்திலே மேலாய் வாழ்வான் !

கணிகைபோல் மனைவி பெற்றால்
    கலவியில் உச்சம் தொட்டு
"இனிமையை அனுப வித்தே
    இப்புவி நீடு வாழ்வான் !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறை நிகழ்த்தும் பெண்ணை
வாழ்வினில் மணம் முடித்தால்
"துன்பமே வாழ்க்கை யென்று
துவண்டுமே கலங்கி வாழ்வான் !"

நூலினைப் பயிலா மாதை
நாடியே மணம் முடித்தால்,
"வாலிலா வானரம்" போல்
வாழ்வெலாம் வருந்தி வாழ்வான் !

கற்றவள் தனையே தேடிக்
கடிமணம் புரிந்த காளை –
மற்றவர் மதிக்கும் "மேன்மை
மண்மிசை பெற்றே வாழ்வான் !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ ஈ கூடப் பறக்கவில்லை

கனிவு மழை தான் சொரியும்
    கடியபனி மார் கழியில்,
இனிதான "ஆதிரை" நாள்
    இரவுபகல் கொண்டாட்டம் !

திருநீறு – பொட்டு டனே
    திருக்கோயில் விழாக் காண
வருகை தந்த அடியவர் தம்
    வடிவழகு சொல்ல வொணா !

கரமேந்தி நின்ற நிரை
    கற்பூரச் சட்டி களும்,
அருள்வேண்டி அடிய ழிக்கும்
    அரிவையரின் அணிவ குப்பும்...

பாற்செம்பு காவடி கள்
    பவனியுடன் பக்தர் களும்
மேலங்கி இல்லா மல்
    வேட்டியுடன் ஆடவரும்,....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுச் சேலை யுடன்
பாவையரும் பல வண்ணப் –
பட்டுப் பாவாடை புனை
பருவஇள மங்கை யரும்,...

மூப்படைந்த சிகை கொண்ட
முதியவரும் மழலை களும்,
கூப்பியதாம் கைகளெனக்
குடியிருந்தார் கோவிலிலே, ...

மேளக்கச் சேரி களும்
மின்னொளியில் பற்பலவும்
தாளலயம் குறை வின்றித்
தடல்புடலாய் நடந் தேற...

பத்துத் தினங் களிலும்
படையெடுத்த சனக் கூட்டம்,
மற்றையநாள் ஆலயத்தை
மறந்ததுதான் ஆச்ச ரியம் !

தீவெட்டி, ஊர்வ லங்கள்
தினம்பத்தில் நிறைவு பெற
"ஈ" கூடப் பறக்க வில்லை
இப்போது ஆலயத்தில் !...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ கணக்காயர் தலை சொறியும் காலமது மாறாதா?

வங்கியைப் போல் கல்வி நிதி
    வழங்குமுயர் ஆசிரியர்
திங்களொன்று திருப்தி யுடன்
    திருச்சேவை செய்து விட்டு
வங்கியிலே வேதனத்தை
    வடிவாகப் பெறச் சென்றால்
'வங்கிக் கணக் கேட்டில்
    வரவில்லை' யென்று பதில் !

வீட்டிலிருள் சூழ்ந்தாலும்
    விளக்கெனவே புவிக்கு ஒளி
காட்டுகின்ற பரம்பரையைக்
    காக்கவைத்து ஏய்ப்பது மேன்?
மாட்சிமைகள் மிக்கவராய்
    மாணவரை மாற்றிவிடும்
ஆட்சி செய்து அரவணைக்கும்
    ஆசான்கள் துயர் பெறவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீளக்காற் சட்டை யது
    நிறம் மங்கிப் போனாலும்
ஏளனத்துக் கணையெறிந்து
    எவர்தவறாய்ச் சொன்னாலும்
சீலத்தை ஓம்பு கின்ற
    சிறப்பான ஆசிரியர்
ஞாலத்தைச் செப்பனிடும்
    நன்றியினை மறப் போமா?

செய்தொழில்கள் ஏராளம்
    செகத்தினிலே இருக்கையிலே,
உய்வடைய வழிகாட்டும்
    உன்னதமாம் கல்வியினை
மெய்யாக ஊட்ட வல்ல
    மேலோர்; நம் கணக் காயர்
'கைபிசைந்து தலை சொறியும்
    காலந்தான் மாறிடுமா?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ தீர்ப்பு

எறிக்கின்ற வெய்யிலது எரிக்கின்ற போதினிலும்
எம் கால்கள் வரிசையிலே நிற்கும் ! – ஒரு
'பொறிக்குள்ளே அகப்பட்டு போய்விட்ட எலி' போலும்
புவி மீது எம் வாழ்வே கைக்கும் !

'குண்டு மழை மத்தியிலே நின்றுயிரைக் காத்தவர்கள்'
குடியெர்ந்து இந்தவிடம் வந்தார் ! – அவர்
கண்டிருந்த வாழ்வினிலே காணாத சோகத்தைக்
கணப்பொழுதில் கண்டாலும் கண்டார் !

தலைவியுடன் மழலைகளைப் பறிகொடுத்த ஆண்மகனும்
'தபுதாரன்' எனும் படியாய் ஆனான் ! – தனது
தலைவனையே பறிகொடுத்து தலைவிதியை நோகின்ற
தலைவியுமோ 'விதவை'யென ஆனாள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிவைத்த மாடிமனை, காசு, பணம் இழந்த நிலை
'கைப்பைகள்' கொண்டவரும் ஓட்டம் ! – இல்லில்
விட்டுவந்த உடைமைகளை எண்ணிநிதம் அன்னவரும்
'வேதனைகள் சுமந்து முக வாட்டம் !'

போனவுயிர் எத்தனையோ புதைக்காத சடலமெனப்
போகும்வழி எங்கனுமே கண்டார் ! – உடல்
ஊனமுற்றோர்; நடந்திடவே முடியாதோர் எத்தனைபேர்
உளம் நிறுத்திப் பார்த்து உளம் நொந்தார் !

'புத்தனவன் போதனைகள் வாழுகின்ற பூமியிலே
புதைபட்டுப் போனதுவா சட்டம்?' – ஒரு
யுத்தமொன்று வந்ததனால் நல்லவர்கள் கெட்டவர்கள்
செத்த பின்னும் பயன்தருமா திட்டம்?

ஆண்டவனே எந்தனது ஆவலினை முறையீட்டை
அர்ப்பணித்தேன், 'நீ தானே காப்பு!' – என்
வேண்டுதல்கள் தனையேற்று வில்லங்கம் வராமல்
'விடிவுவர நீவழங்கு தீர்ப்பு !'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ பழி ஓயுமா!

விந்தை விதைத்தார் தந்தையவர் – ஒரு
    விந்தை தனையே விளைத்திட்டார் !
தந்தை விருப்புக்கு ஒத்தாசை – தாய்
    தன்னைக் கொடுத்தது அவளாசை !

வந்து பிறந்தேன் நானப்பா – துயர்
    வாழ்வில் காண்பது ஏனப்பா?
சொந்தம் பந்தம் பலநூறு – இருந்தும்
    சோகம் காண்பது பெறுபேறு !

அந்தோ வாழ்வு பரிதாபம் – பிறர்
    அல்லும் பகலும் பரிகாசம் !
விந்தை என்பது இது தானா? – நான்
    வந்து பிறந்தது அதுவீணா?

போர்வை, மாலை, புகழ், காசு – ஏழைப்
    புலவன் எனக்கு இவைதூசு !
பார்வை சமூகப் பண்பாடு – எனைப்
    பார்ப்பவர் பலர்க்குள் முரண்பாடு !

கொஞ்சம் காலம் புவி வாழ்க்கை – இதைக்
    கொண்டு நடத்திட இந் யாக்கை
பஞ்சம் பட்டினி தீர்ந்திடலாம் – பழி
    பகர்பவர் குரல்கள் ஓய்ந்திடுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ நீதிக்கே தலை சாய்ப்பேன்!

விருத்தனாய் அகவை போயும்
    விருத்தங்கள் எழுதும் ஆசை
இருப்பதால் நாளி தழ்க்கு,
    இடைக்கிடை எழுதிக் கொள்வேன் !

நாட்டுநன் நடப்பு காணும்
    நலிவுகள் கதிரைச் சண்டை
பாட்டுக்கு கருவாய் ஆகும்
    பாராட்டும், ஏச்சும் சேரும் !

இல்லாத ஒன்றை யென்றும்
    இருப்பதாய் சொல்ல மாட்டேன்
உள்ளதை உள்ள தென்று
    உரைப்பதால் தானே சிக்கல் !

கொக்கினைக் காகம் என்றே
    கூறிட மனம் மறுக்கும்;
சத்தியம் காப்ப தாலே
    சனமெலாம் எனை வெறுக்கும்

பத்தினித் தெய்வ மென்று
    பரத்தையைச் சொல்ல லாமா?
உத்தமர், தலைவ ரென்று
    உலுத்தரை உரைக்க லாமா?

கொஞ்சநாள் மனித வாழ்க்கை
    குருடனாய் வாழ மாட்டேன்
நெஞ்சத்தில் நிறுத்துப் பார்ப்பேன்
    "நீதிக்கே தலையைச் சாய்ப்பேன் !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ வெளிச்சம் என்று கிடைக்கும்?

அருமை மிக்க இராஜேஸ்வரி
அன்ரிக்(கு) இங்கு வருத்தம் ! – அது
உரிமை கொண்ட மீரா எந்தன்
உள்ளம் தன்னை வருத்தும் !

செல்லமான 'அன்ரி' பேச்சு
வெல்லமாக இனிக்கும் ! – அவள்
எல்லையில்லா நகைச்சுவைகள்
கொஞ்ச நாளாய் அ(மு)டக்கம் !

முறுவல் செய்யும் அழகு முகத்தை
மூடும் துன்பத் திரைகள் ! – எனை
வறுமை வாட்ட மறந்த போதும்
வாட்டும் இந்த நிலைகள் !

இட்லி, தோசை, இடியப்பம்
இனிக்கும் லட்டு வடைகள் – தினம்
சுட்டு அவித்து வழங்கும் கைகள்
சோர்ந்து போன நிலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி செவ்வாய் கோயில் செல்லும்
    வீரியத் தான் இல்லை "அன்ரி" –
உள்ளந் தன்னில் கவலை கூடி
    உறுத்தும் சுமைகள் தொல்லை !

பக்கத் துணைக்கு 'ஹேமா' மட்டும்
    பகலில் கொஞ்சம் உதவி ! – இரவு
நிற்க பார்க்கத் தூக்க சாய்க்க
    'நிரோஜி' மட்டும் தகுதி !

இனிய சேய்கள் இரண்டு பேரும்
    இலண்டன் நகரில் உள்ளார் ! – இங்கு
தனிமையாக அப்பா மட்டும்
    தாங்கும் இன்னல் கொள்ளை !

கொழும்பு நகரின் வாழ்க்கை "அன்ரி"
    கொடுத்து வைத்த சுவர்க்கம் ! – பாயில்
விழுந்து கிடக்கும் நிலைமை மாறி
    வெளிச்சம் என்று கிடைக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ என் உயிரில் நீ பாதி!

என்னுயிரில் சரி பாதி
எனவாகி இருக்கின்ற
என்னவளே மோகனம் நீ,
என்கண்ணின் கதிராளி !

புன்னகையால் களி தந்து
பூரிக்க மொழி தந்து
உன்னிதழால் தேன் வார்த்து
உயிரோடு கலந்தவள் நீ !

பள்ளியிலே பயிலுகின்ற
பருவத்தே சிறு வயதில்
கள்வன் – காவல் எனக்
கலந்தோடி மகிழ்ந்தவள் நீ !

திருவா திரை'த் திங்கள்
'திருவெம் பாவை' யெனும்,
புருடர் பெறு நோன்பதனை
புனிதமுடன் நோற்றவள் நீ !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தில் நான் உனக்கு
இல்லையெனில் வாழ் வெனக்கு
இல்லையெனும் முடிவோடுன்,
இலட்சியத்தில் வென்றவள் நீ !

கருதந்து கவி யெழுதக்
காலமெல்லாம் அருகிருந்து,
உருவாக்கி கவிஞனென
உயர்வாக்கி விட்டவள் நீ !

கட்டிலறைச் சுகம் என்னும்
கலவியலில் பாடங்கள்
வெற்றிபெறச் சுவை சேர்த்து
விளையாட விட்டவள் நீ !

இன்பத்தை உச்ச மதை
இனிமையினை இருவருமே
பங்கேற்று மகிழ்வு பெறப்
பாத்திரமாய் ஆனவள் நீ !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுக்கைக்கு விடை தந்து
    உடும்பாகி என்னருகில்
படுக்கையிலே விருந்தளித்த
    பருவத்துச் சாகரம் நீ !

சொல்லவொணா லீலை களால்
    சுகம் தந்து சூடேற்றி
எல்லையிலா சொர்க்கமதை
    இராமுழுதும் இறைத்தவள் நீ !

தங்கத்தை விரும்பு கின்ற
    தையலர்கள் போலின்றி
மங்காவென் மன நிறைவை
    மனமேற்று மகிழ்ந்தவள் நீ !

என் விருப்பில் ஒரு பொழுதும்
    எதிர்க்கருத்தும் கூறாமல்
அன்பாக உப சரித்தே
    அறம் போற்றி வாழ்பவள் நீ !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ நளினங்கள் காட்டுகிறாள்!

மங்கையென மண்ண கத்தில்
மகிழ்வூட்ட வந்த மகள் !
திங்கள்நிகர் வதனத் தாள்
திருமகள்போல் எழிலுடை யாள் !
தங்கமெனும் தளிருடலாள்
தாசனெனை மயக்கு மிரு
கொங்கை வனப்பு டையாள்;
கோதையவள் எனக்குடையாள் !

மாறாநல் லன்புடை யாள்
மயில்போலும் சாய லினாள் !
கூறாக்கும் விழியுடை யாள்
கூவமெனும் குரலுடையாள் !
பேறென்றே நான்க ளிக்கும்
பெருநிதியம் அவள்; கன்னற் –
சாறென்னும் இனிமை தரும்
சாகரத்தில் மூழ்க டிப்பாள் !

'ஒல்லி' யெனும் உடலுடை யாள்
ஓதிமம்போல் நடையுடையாள் !
அள்ளிநிதம் அணைத்தெ டுக்கும்
ஆசை மது ஊட்டுகிறாள் !
பள்ளியறைப் பாட மெல்லாம்
பயிற்றுவிக்கும் குரு ஆவாள் !
நள்ளிரவில் மெய் மறக்கும்
நளினங்கள் காட்டு கிறாள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ வா(பா)ழ் வளவு

உள்ளங்கை போல் வளவில்
உள்ளதெலாம் பயன்ம ரங்கள் !
பள்ளத்தில் தென்னை களும்
பழமெறியும் பனை மரமும்,
இல்லையென்று சொல்வ தற்கு
இல்லாமல் விதம் விதமாய்
நல்லழகுப் பூஞ்செ டிகள்
நனிசிறந்த மூலிகைகள் !

வாழையுடன் மாக்கள் பலா
வாகான முக்க னிகள் !
'ஏழைகளின் உணவு' எனும்,
ஏற்றமுறு மர வள்ளி !
தோடையுடன் அன் னாசி,
தொகை யில்லாப் பப்பாசி
கோடைவெயில் தணிக்கின்ற
குலைதாங்கும் செவ்விளநீர் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை, வெண்டி, தக்காளி
அகழ்ந்து பெற கிழங்குவகை !
பயிற்றை, வல்லாரை யுடன்
படர்பாகல், கத்தரிகள்
அல்லல் அகற்றி விடும்
அகத்தியோடு – குறிஞ்சாவும்,
முல்லை, முசுட்டை, கறி
முருங்கை, சுவைக் கானாந்தி !

கறிவேப் பிலை, றம்பை
கறிமிளகாய், வெங்காயம்
அறுசுவைசேர் கறிச மைக்க
அனுதினமும் உதவும் வகை,
கண்பறிக்கும் வித மாகக்
காட்சிதந்த 'வாழ்வளவு,'
என்மாமன் இறந்த பின்னர்
எழில்தீர்ந்த 'பாழ் வளவு !'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ யார் தடுப்பார்?

வான்பரப்பில் வட்ட மிடும்
வல்லூறு, மலர்களிலே –
தேன்மாந்தி உலவுகின்ற
ரீங்கார வண்டினங்கள்,
கான்மரங்கள் கூடுகட்டும்
கவினார்ந்த புள்ளி னங்கள்
ஏனின்னும் மனிதர்கள்போல்
இருகுழுக்கள் ஆன தில்லை?

மாடாடு மான் மரையும்
மற்றுமுள விலங்குகளும்
ஊடாடும் ஊர் வனவும்
உலகினிலே வெவ்வேறாய்
வாணாளில் பகை பற்றி
வாழ்ந்ததெனும் சரிதமில்லை !
ஆனாலும் மாந்தர் களில்
ஆறேழு பிளவு உண்டே !

பகுத்து அறியு மந்தப்
பக்குவத்தை ஆறறிவால்,
வகுத்து வாழ் வியலை
வளம்செய்யும் மனுக்குலத்தில்
போட்டிகள் பூச லுடன்
பொல்லாத கெடு பிடிகள்
ஆட்டங்கள் போடுவதை
அவனியிலே யார் தடுப்பார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ காதல் வாழ்வினில் கவலை வந்தது!

கற்றை கற்றையாய் "கரன்ஸி" நோட்டுகள்
'கனடா' விருந்துமே வந்தது ! – அது
மற்றையோர்களை மதித்திடா, ஒரு
மனநிலையினைத் தந்தது !
பெற்றதாயையும், தந்தை, தங்கையைப்
பிரியும் எண்ணமும் வந்தது ! – பாசம்
பற்றறுத்துமே பறந்து சென்றிடும்
படியொரு நிலை தந்தது !

காதல் வாழ்க்கையில் களிப்பு ஓடிட,
கவலை தன்னையே தந்தது ! – நிதம்
பேதம் கண்டுமே "பிரளி" செய்திடும்
பெருமை நெஞ்சிலே வந்தது !
'காது கைகளில் கழுத்து' யாவிலும்
கனகமாய் ஒளி மின்னின – மிகச்
சாது வானவள்; "சண்டைக்காரி"யாய்
சகத்தில் மாறிட, உன்னின !

பற்றறுந்தது; பாசம் என்பது
"பரிதிமுன் பனி" ஆனது ! – அயல்
மற்றை யோரெலாம் "மித்திரர்" எனும்
"மகுடம்" பெற்றது, ஏனது?
கற்ற கல்வியால் "பதவி" தன்னையே
கடிதில் பெற்றதால் "தலைக்கனம் !" – தன்
'பெற்ற தந்தை' யைப் "பேயன்" என்றுவாய்,
பேச வைத்ததா இலக்கணம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ பருவ விழா

பேர்விளங்கும் 'அரஞ்சலவள்'
    பெற்றெடுத்த மூத்த மகள்,
பார்வியக்கும் பேரழகி
    "பவித்தா"வின் பருவ விழா !
ஆறேழு நாட்கள் மனை
    அமர்க்களமாய் ஆனது மெய் !
வீடுமுதல் வீதி வரை
    விசாலித்து சோடனைகள் !

"வீடியோ" படப்பிடிப்பு
    விதவிதமாய் உபசரிப்பு
சாதனைதான் ! அறுசுவையில்
    சாப்பாடு, குடி வகைகள்,
மாதருடன் ஆடவரும்
    மழலைகளும் குதூகலந்தான் !
காதலுடன் அனைவருமே
    கைகுலுக்கி விடை பெற்றார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்ேற்று வந்தவர்கள்
    அளித்திட்ட வெகுமதிகள்...
விலை மிக்க பரிசுப்பொருள்
    விதவிதமாய்க் குவிந்தபடி
நலன் ஓம்பும் நடைமுறைகள்
    நடந்தேறி நல்ல விதம்
களைகட்டி நிறைவு பெறும்
    கடன்பட்ட பருவவிழா !

வட்டிக்குப் பணம் வாங்கி
    வந்தவர்கள் வியப்படையக்
கொட்டிப்பணம் தீர்ந்த –
    கொண்டாட்டச் செலவுகளின்
பட்டியலைச் சரிபார்த்தார்
    பல இலட்சம் கை நட்டம்,
பெட்டிப் பாம் பெனவே
    பேசாமல் இருக்கின்றார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ பெருமைக்குரிய தலைவன்

ஊரைச் சுருட்டி வாழ்ந்தா யெனினும்
    உந்தன் கையில் காசு இருந்தால்
ஊரே கூடும்; வாழ்த்துப் பாடும்
    உத்தம னென்று மாலைகள் சூடும் !

ஆயபல் கலைகள் கற்றிருந் தாலும்
    ஆமுயர் பதவி பெற்றிருந் தாலும் –
மாயஇவ் வுலகில் பணந்தா னின்றேல்
    மனிதன் நீயென மறந்தே போகும் !

சத்தியம் தன்னை நீமறந் தாலும்
    சாரா யத்தைத் தான்குடித்தாலும்,
மித்திரர் பலரும் இல்லம் புகுவார்
    மேலவன் என்று விருதுகள் தருவார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயதாம் செயல்களை நீதொடர்ந்தாலும்
　　திருமணம் இரண்டு நீமுடித்தாலும்,
நேயம் மிக்கான் கண்ணிய னென்று
　　நெருங்கி வந்துன் கரங்கள் குலுக்கும் !

கன்னியர் பலரை நீகெடுத் திடினும்
　　களவு, பொய்யைக் கைக்கொண்டாலும்,
உன்னிடம் பணத்தாள் உண்டே யென்றால்
　　ஊரினில் நீதான் உயர் அதிகாரி !

வட்டி வாங்கி வாழ்ந்தா யெனினும்
　　வாட்டிப் பலரை வதைத்தா லேனும்,
"பெட்டி நிறையப் பொன்பொரு ளிருந்தால்
　　பெருமைக் குரிய தலைவன் நீதான்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ விடை கிடைக்கவில்லை!

உடன்பிறவாத அண்ண(ன்)ர்
உயரிய எழுத்தின் மன்னர்
கடமையில் ஓய்வுபெற்றும்
கா(ஓ)யாமல் எழுதுகின்றார் !
சிறுகதை எழுத வல்லார்
சிறந்தவோர் கவிதை யாளர்
சிறுவரின் கதைகள், காதை
செய்துமே விருது பெற்றார் !

ஒன்றாக இரண்டு நூலை
உவர்மலைக் கல்விச் சாலை
தன்னிலே வெளியிட்டாராம்
'தாமரைத் தீவான்' சொன்னார் !
"வீரகே சரி"யில் இந்த
விளம்பரம் தானும் போன –
வாரத்தில் வந்த தென்று
வாத்தியார் ஒருவர் சொன்னார் !

வாழ்த்தியோர் அஞ்சல் சேர்க்கும்
வாஞ்சையோ டிருந்த என்னை
வீழ்த்தினாள் துயரக் காட்டில்
விபரீதம் நடந்து போச்சே !
"அண்ணனேன் உங்களுக்கு
அழைப்பிதழ் அனுப்பவில்லை?"
என்னவள் கேட்ட பின்பே
எனக்குளோர் ஆய்வ ரங்கம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணத்திலே விடையை என்னால்
கண்டிட முடிய வில்லை
மணிக்கணக் காக யானும்
மனதிலே கோலம் போட்டேன் !
"புத்தகம் போட்டு, என்னை
புவியுளோர் காண, உந்து
சக்தியாய் இருந்த வர்க்குச்
சடுதியாய் நடந்த தென்ன?"

ஆண்டுகள் இரண்டு நானும்
ஆலையூர்ப் பதியை விட்டு,
தாண்டியே வடபு லத்தில்
தரித்ததால், மறந்தா போனார்?
கையிலே காசு இல்லாக் –
காரணம் தானா? இல்லை
செய்தொழில் இழந்து போயென்
சிறப்புகள் தொலைத்த தாலா?

இடப்பெயர் வுற்று வந்து(ம்)
இன்னல்கள் காண்ப தாலா
மடலிட மறந்தார் அண்ணர்?
மனதிலோர் குழப்ப மாச்சு !
இடிமின்னல் பலத்த காற்று
இரவெல்லாம் மழையின் ஆட்சி,
விடிந்தது காலை ஆனால்
"விடையது கிடைக்கவில்லை !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ கண்ணீர்

கண்களிலே வருவது தான்
கண்ணீராம் ! அனு தினமும்
புண்பட்ட இதயம் அழ
பொங்கிவரும் கண்ணீராம் !
மண்ணகத்தில் மகிழ் வென்றும்
மடிதவழும் போதினிலே,
உன்னதமாம் ஆனந்தக் –
கண்ணீரும் ஓடி வரும் !

கடன்தொல்லை நெருக்கடிகள்
கவலைதரும் போதினிலே
உடன் பிறந்தோர் கை விரித்தால்
உகுத்திடுமே கண்ணீர் தான் !
படம்போல முடிந்து விடும்
பார் வாழ்வில் மரண மொன்று
இடம்பிடிக்கும் வேளையிலும்,
இரு விழியில் கண்ணீர் தான் !

கைபிடித்த ஆளன், அவன்
கைவிட்டுப் போய் விடினும்
மைவிழியார் கவலை யிலே,
மனம்தோய கண்ணீர்தான் !
காலம், நேரம் எலாம்
கண்ணீரின் எல்லையில்லை !
ஞாலத்தில் வாழ்பவர் தம்
வாழ்வியலே கண்ணீர்தான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலைநிலப் பரப்பி னுக்குப்
பனிப்பெண்ணாய் போன வளும்,
ஆலையிலே அகப் பட்ட
அடிக்கரும்பாய் உருக் குலையும்,
வேளையிலே தாய் மண்ணில்
வாழ்ந்த பழம் நினைவுகளும்
சூழுகின்ற போதி னிலே
சோகத்தில் வரும் கண்ணீர் !

பன்னீரில் உடல் குளித்து
பணம் தனிலே படுத்த வரும்,
மன்னரென இம் மண்ணில்
மகுடமுடன் வாழ்ந்த வரும்
இறுதியிலே விழி சொருகி
இன்னலுடன் உயிர் பிரிய
இருக்கையிலே, முனகலுடன்
இருவிழியில் கண்ணீர் தான் !

இறக்கும்வரை வாழ்வியலும்
இவ்வுலகின் ஒத்திகை தான் !
பிறந்தவுடன் சேய் அழுதால்
பிறப்பதில்லை கண்ணீர்தான் !
கத்துகின்ற கடல் நீரும்,
கண்ணீரும் ஒன்றே தான் !
உப்புக் கரிக்கும் அந்த
உவர்ப்பு சுவை ஒன்றே தான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ நிழல் போச்சே!

குடைபோலும் நின்று குளிர்
நிழல்தந்த ஆத்திமரம்
அடியோடு தறி படவே,
அனல்கூடி எரிக்க மனைப்
படிதாண்டி வெளி வரவே
முடியாமல் "காண்டீபன்"
அடைபட்டுக் கிடக்கின்ற
அந்தநிலை பரிதாபம் !

நடையிலே வருபவரும்
நல் ஆத்தி நிழலினிலே
நொடிப்பொழுது தரித்திருந்து
விடைபெற்றுக் கொள்ளுவதும்,
பிடித்தநோய் தீருமென்று
பேயோட்ட, காய்வெட்டும்
வடிவில்லா நிகழ்வனைத்தும்
வாழ்நாளில் கண்ட மரம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்நடையாய் வருபவரும்
    காய்கறிகள் விற்பவரும்,
பால்விற்று செல்பவரும்
    பழம்விற்க வருபவரும்
போற்றியே இளைப்பாறிப்
    புளகிக்கும் குளிர் நிழலை –
மாற்றமின்றித் தரும் ஆத்தி
    மரந்தனையே காணவில்லை !

காஞ்சன் கணபதி யர்
    காணியது பண்டைய நாள் !
கொஞ்சம் கொஞ்சமெனக்
    குடியேறி ஊர்சிறக்க
அஞ்சலா தேவி யவள்
    அப்பம்மா வெள்ளச்சி –
சொந்தக் காணி முன்னே
    சோபித்து நின்ற மரம் !

எரிக்கும் வெயில் காலம்
    எல்லோரும் பாய்விரித்துச்
சிரித்துக் கதைபேச
    சிறப்பளித்த ஆத்திமரம்;
ஒரு நொடியில் தரைமட்டம் !
    ஒருசிலவாம் திங்கள் வரை –
விறகுக்கோ பஞ்சமில்லை
    விசாலித்த நிழல் போச்சே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்

நேரான சிந்தனைகள் உள்ளவர்கள் தம்மோடு
நெருங்கியே பழகுவேன் நான் ! – கொடும்
கூரான ஆயுதங்கள் கொண்டுலவும் பேர்களுடன்
கூடாமல் ஒதுங்குவேன் நான் !

பாராளும் மன்னவராய் இருந்தாலும் நீதிநெறி
பற்றாரேல், பயப்படேன் நான் ! – செயும்
ஏராளம் தீச் செயல்கள், சுயநலங்கள் பற்றியெலாம்
எப்பொழுதும் எழுதுவேன் நான் !

பற்றோடு பழகுகின்ற பண்பான பேர்களுக்குப்
பணிவிடைகள் செய்குவேன் நான் ! – நேர்மை
அற்றோர்க்கு வால்பிடிக்கும் அநியாயம் மிக்கவரின்
அணியிருந்து விலகுவேன் நான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊராரின் பணத்தினிலே உடல்வளர்க்கும் கயவர்களாம்
உலுத்தர்களின் எதிரியே நான் ! – பக்கம்
சாராமல் நின்று நிதம் சத்தியத்தைக் காப்பவர்க்கு
சகத்தினிலே மித்திரன் நான் !

தன்னலத்தைப் பாராமல் என் நலத்தில் நாட்டமுள்ள
தாயவளின் அடிமையே நான் ! – இந்த
மன்பதையில் வாழ்வாங்கு வாழ்ந்து மறைவதென்ற
மனத்துணிவு கொண்டவன் நான் !

செப்பரிய இளமையிலே செல்வியர்கள் விழிவீச்சில்
சிந்தைபறி கொடுத்தவன் நான் ! – எனினும்
கைப்பிடித்த மனைவியுடன் கடைசிவரை வாழ்வதென்னும்
கௌரவத்தைப் போற்றுவேன் நான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ மரண பயம்

அடிக்கடி மரணபயம் அடியவனென் நெஞ்சினிலே
அடிபதித்து அச்சமூட்ட,
நெடிதான துயில்நீத்து நிம்மதியும் இல்லாமல்
நிலைமைதடு மாறுகின்றேன்!
படிக்காத திருப்புகழை, பக்தித்திரு வாசகத்தைப்
படிக்கின்றேன் மனத்திருத்தி;
வடிவேலா, கந்தவேள், வள்ளிமண வாளனென
வாய்நிதமும் உச்சரிக்கும் !

'பிறப்புண்டேல் இறப்புண்டு' பேசுமுயர் தத்துவத்தைப்
பேயன்யான் தெரிந்திருந்தும்,
மறந்தேயென் மதிகெட்டு மந்தையென வாழ்நாளை
மண்ணகத்தில் ஓட்டிவிட்டேன் !
குறங்குக்கும், சிரங்குக்கும் குவிமுலைகளிரண்டுக்கும்
கோடிபணம் செலவழித்தும்,
அறஞ்செய்ய மறந்தவனாய் வாழ்ந்ததனை எண்ணுகையில்
அடிமனதோ எச்சரிக்கும் !

காலைமுதல் மதியம்வரை கதிர்சாயும் மாலைவந்து
கங்குலது பரவுகின்ற
வேளைவரை ஆலயத்தில் வீழ்ந்துதினம் கிடந்து, மனம்
வேதனையை ஒப்புவிக்கும் !
சீலர்களைக் கண்டிருந்தும் சிந்தனையே இல்லாமல்
சீரழித்தேன் வாழ்நாளையென்(று)
ஓலமிடும் மனத்தினையே தேற்றும்வழி அறியேனே,
உண்டாகும் "மரணபயமே !"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✦ மழலையால் மகிழ்ச்சி கொள்ளை

மூன்று பெண் மக்கள் உள்ளார்
 மூத்தவள் மிகவும் செல்லம்
நான்வீட்டில் உள்ள வேளை
 நான்படும் தொல்லை நூறு !
கான்மலர் கொய்து கேட்பாள்
 காற்றாடி செய்து கேட்பாள்
தீன்பண்டம் வாங்கக் காசு
 தினமுமே பறித்துக் கொள்வாள் !

மற்றிரு மக்க ளோடும்
 மணிக்கிரு சண்டை போட்டு,
பற்றுவாள் கையில் உள்ள
 பட்சணம்; பலதும் கொள்வாள் !
கற்றிடப் பணித்தால் மட்டும்
 கவனமாய் கற்கின் றாள்;தன் –
வெற்றியைப் பலரும் கண்டு
 வியந்திட, மகிழ்ச்சி கொள்வாள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுப்புது ஆடை கேட்பாள்
 புவியுளோர் துயிலும் போதும்,
புதுக்கதை வேண்டு மென்பாள்
 புகன்றதைப் பழைய தென்பாள் !
நிதமும் என் புதல்வி தானும்
 நித்திரை கொள்ளும் மட்டும்,
கதைசொல்லிக் களைத்துப் போவேன்
 காரிகை தப்பிக் கொள்வாள் !

விளக்கங்கள் கேட்டுக் கேட்டே
 வினாக்களை அடுக்கிப் போவாள்
பழக்கத்தை மாற்று தற்குப்
 பலமுறை முயன்று தோற்றேன் !
மழலையைக் கண்டித் தற்கும்
 மனம்வராக் கவிஞன் என்னைக் –
குழந்தைபோல் நடத்தும் அந்தக்
 'குழந்தையால் மகிழ்ச்சி கொள்ளை !'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரபில் ஆர்வம் குறைந்து வருகின்ற இக்காலத்தில் மரபுக்கவிதை படைப்போர்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒருவர் கவிமணி அம்.கௌரிதாசன். கிண்ணியாப் பிரதேசத்தின் பழம்பெரும் ஆலங்கேணிக் கிராமத்தைச் சேர்ந்தவர் இவர்.

நான்கு தசாப்தங்களுக்கு மேல் இலக்கியம் படைத்து வருகின்றார். இதன் மூலம் இலங்கையில் மட்டுமல்ல சர்வதேசத்திலும் தனது பெயரைப் பதித்துள்ளார்.

இதனால் பல அமைப்புகளினால் பல பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். பல விருதுகள் இவருக்குக் கிடைத்துள்ளன. இவரது “ஒரு கவிதை எழுதிவிட” கவிதை நூல் ஒன்றுக்கு மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ளது.

கவியரங்கங்கள் உள்ளிட்ட பல மேடைகளில் இவரது கவித்திறன் பறைசாற்றப்பட்டுள்ளது. தமிழின் செழுமையை நன்கு பயன்படுத்திக் கவிதை புனைவதிலும், கவிதை படிப்பதிலும் தனக்கென தனியிடத்தைக் கைப்பற்றிக் கொண்டவர் இவர்.

சமகால மூத்த இலக்கியகர்த்தாக்களுள் இவரும் பெயர் சொல்லக்கூடிய ஒருவர். பல்வேறு கருப்பொருள்களின் கீழ் தடம் பதித்துள்ள இவரது கவிதைகளும் தமிழ்கூறும் நல்லுலகில் நிலைத்து நிற்கும் என்பதில் சந்தேகமேதுமில்லை.

*ஏ.ஸீ.எம்.முஸ்இல் (சட்டத்தரணி)*
*திட்டமிடல் பணிப்பாளர்,*
*கல்வி, பண்பாட்டலுவல்கள்,*
*விளையாட்டுத்துறை அமைச்சு,*
*கிழக்கு மாகாணம்.*

ISBN:978-624-98489-1-7

விலை : *450/-*

தேடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org